بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ    نَحۡمَدُہٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡمِ    وَعَلٰی عَبۡدِہِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡدِ

وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّۃٌ

தொகுதி 7 | இதழ் 29

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly **BADAR** Qadian Tamil

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

வருடாந்திர சந்தா ரூபாய் 575/-

துல்ஹஜ் 21 - ஹிஜ்ரி கமரி 1443 ★ வஃபா 21 - ஹிஜ்ரி ஷம்ஸி 1401 ★ 21 ஜுலை 2022


## அல்லாஹ்வின் கட்டளை

وَاِذَا رَاَیۡتَ الَّذِیۡنَ یَخُوۡضُوۡنَ فِیۡۤ اٰیٰتِنَا فَاَعۡرِضۡ عَنۡہُمۡ حَتّٰی یَخُوۡضُوۡا فِیۡ حَدِیۡثٍ غَیۡرِہٖ ؕ وَاِمَّا یُنۡسِیَنَّکَ الشَّیۡطٰنُ فَلَا تَقۡعُدۡ بَعۡدَ الذِّکۡرٰی مَعَ الۡقَوۡمِ الظّٰلِمِیۡنَ

**பொருள்** : நம்முடைய வசனங்களை ஏளனம் செய்து பேசுவோரை நீர் கண்டால், அவர்கள் இதைவிட்டு வேறு பேச்சில் ஈடுபடும் வரை, நீர் அவர்களை விட்டு விலகியிருப்பீராக. ஷய்த்தான் உம்மை மறக்கச் செய்தால், நினைவு வந்த பிறகு நீர் அநீதி இழைப்பவர்களுடன் அமர்ந்திருக்காதீர்.

( அல் அன் ஆம் : 69 )

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸுர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸுர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

## இறையச்சம் உடையவர்களுக்கு பெரும் பெரும் வாக்குறுதிகள் (வழுங்கப்பட்டு) உள்ளன.

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து......

இதற்குப் பிறகு இனி நான், இறையச்சம் உடையவர்கள் யார்? என்ற அசல் கருத்தின் பக்கம் வருகிறேன். உண்மையில் இறையச்சம் உடையவர்களுக்கு பெரும் பெரும் வாக்குறுதிகள் உள்ளன. அல்லாஹ் இறையச்சம் உடையவர்களின் நண்பனாகிவிடுகின்றான் என்பதை விட பெரிய விஷயம் (வேறு) என்ன இருக்க முடியும்? நாங்கள் இறை சன்னிதானத்திற்கு நெருக்கமானவர்கள் என்று கூறுபவர்களிடம் இறையச்சம் இல்லையென்றால், அவர்கள் பொய்யர்கள் ஆவர். மாறாக, அவர்கள் தீய, அசுத்தமான வாழ்க்கையை வாழ்பவர்கள் ஆவர். மேலும் ஓர் அநீதியையும், உரிமை பறிப்பையும் அவர்கள் செய்கின்றனர். அதேநேரம், அவர்கள் இறைநேசம் மற்றும் இறைநெருக்கத்திற்கான அந்தஸ்து தங்களுக்கு இருப்பதாக வாதிடுகின்றனர். ஆனால், அந்த அந்தஸ்தை பெறுவதற்கு இறையச்சம் உடையவர்களாக இருக்க வேண்டும் என்ற நிபந்தனையை அல்லாஹ் விதித்துள்ளான்.

அடுத்து, மற்றொரு நிபந்தனையையும் (அல்லாஹ்) விதித்துள்ளான். அல்லது இறையச்சம் உடையவர்களின் மற்றோர் அடையாளத்தை கூறுகின்றான் என்று கூட கூறலாம்.

اِنَّ اللّٰہَ مَعَ الَّذِیۡنَ اتَّقَوۡا

இறைவன் அவர்களுடன் இருக்கின்றான். அதாவது, இறையச்சம் உடையவர்களாக இருப்பவர்களுக்கு அவன் உதவி செய்கின்றான். அல்லாஹ்வின் தோழமைக்கான சான்று அவனது உதவியின் மூலமே கிடைக்கின்றது. நன்றாக நினைவிற் கொள்ளுங்கள். அசுத்தமான நபர்களுக்கும், தீயவர்களுக்கும் அல்லாஹ்வின் உதவி ஒருபோதும் கிடைக்க முடியாது. அதற்கான அடிப்படையாக இறையச்சமே உள்ளது. இறைவனின் உதவி என்பது இறையச்சம் உடையவர்களுக்கே கிடைக்கின்றது.

(மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 379, காதியான் பதிப்பு 2018)

## நபிமொழி

(2065) ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். ஒரு பெண் தனது வீட்டிலுள்ள உணவுப் பொருட்களிலிருந்து, அதனை பாழ்படுத்தும் எண்ணமில்லாமல் அல்லாஹ்வின் வழியில் செலவு செய்தால் அவருக்குரிய நற்கூலி அவருக்கு கிடைக்கும். அவர் செலவு செய்ததற்குரிய நற்கூலி அவருக்கு உண்டு. மேலும், அதனை சம்பாதித்ததற்குரிய நற்கூலி அவரது கணவருக்கு உண்டு. கருவூலப் பொறுப்பாளருக்கும் அதேபோன்று நற்கூலி உண்டு. ஒருவர் மற்றவரின் கூலியில் எதனையும் குறைத்துவிட மாட்டார்.

ஸஹீஹ் புகாரி, தொகுதி-4, பாடம் வியாபாரம், காதியான் பதிப்பு 2008)

* * * * *

## நபித்துவம் இன்றி, உலகம் ஒருபோதும் தனது உரிமைகளை தக்கவைத்துக் கொள்ள முடியாது.

وَاللّٰہُ فَضَّلَ بَعۡضَکُمۡ عَلٰی بَعۡضٍ فِی الرِّزۡقِ ۚ فَمَا الَّذِیۡنَ فُضِّلُوۡا بِرَآدِّیۡ رِزۡقِہِمۡ عَلٰی مَا مَلَکَتۡ اَیۡمَانُہُمۡ فَہُمۡ فِیۡہِ سَوَآءٌ ؕ اَفَبِنِعۡمَۃِ اللّٰہِ یَجۡحَدُوۡنَ

( அந்நஹ்ல் : 72 )

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் இந்த வசனத்திற்கு விளக்கமளித்தவாறு இவ்வாறு கூறுகின்றார்கள் :

நாடுகள் மற்றும் அரசாங்கங்களின் அதிகாரத்தை கைப்பற்றுகின்ற மக்களின் பெரும் சாக்குபோக்கு என்னவாக உள்ளதென்றால், உலகின் நிர்வாகம் தகுதியானவர்களின் கைகளில் இருக்கவேண்டும் என்பதாகும். சில குடும்பங்கள் மற்றும் வீடுகளை மட்டும் வெற்றிக்குரியவர்களாக ஆக்கிக் கொள்கின்றனர். மேலும், மன்னராட்சி நிலைபெற்றுவிடுகின்றது. ஆட்சி செய்வதற்கு சில குடும்பங்கள் தகுதியானவையாக ஆக்கப்படுகின்றன. பொதுமக்களிடமிருந்து எந்த கருத்தும் பெறப்படுவதுமில்லை. நிர்வாகத்தில் அவர்களுக்கு எந்தப் பங்கும் வழங்கப்படுவதுமில்லை. அதுமட்டுமல்லாமல், மார்க்கத் தலைவர்களும், பண்டிதர்களும் சில மனித உரிமைகளை பறித்துக் கொள்கின்றனர். மார்க்கம் என்பது பண்டிதர்கள், மவ்லவிமார்கள் மற்றும் பாதிரிகளின் சொத்தாக ஆக்கிக் கொள்ளப்படுகிறது. பொதுமக்களுக்கு மார்க்க அறிவு வழங்கப்படுவதுமில்லை. அதில் அவர்கள் ஆர்வம் கொள்வதற்கு வாய்ப்பு வழங்கப்படுவதுமில்லை. மார்க்கத் தலைவர்கள் கூறும் விவகாரங்களை ஏற்றுக் கொள்வது மட்டுமே அவர்களின் வேலையாக கருதப்படுகின்றது. மேலும் மார்க்க புத்தகங்களை சீர்தூக்கிப் பார்ப்பதும், அதிலிருந்து பயன்பெறுவதும் அவர்களின் வேலை அல்ல என்றும் கருதப்படுகிறது.

சுருக்கமாக, நபித்துவத்தின் காலத்திலிருந்து சமுதாயம் தொலைவில் சென்றுவிடும்போது அதன் சில உரிமைகள் சில குடும்பங்களின் கட்டுப்பாட்டில் சென்றுவிடுகின்றன. மார்க்கம் மற்றும் உலக விவகாரங்களிலும் ஆலோசனை கொடுப்பதற்கு அல்லது கருத்து கூறுவதற்கு சாதாரண மக்களை தகுதியுடையவர்களாக கருதுவது இல்லை. ஓர் அரசனின் அறிவீனரான மகன் உலகின் மாபெரும் புரியும் தன்மை கொண்டவராக கருதப்படுகிறார். மார்க்க உலகிலும் இதே நிலைதான் உள்ளது. ஆலிம்களின் மகன்கள் அரைகுறை அறிவு பெற்றிருக்கும் நிலையிலும், சிந்திக்கும் ஆற்றலிலிருந்து இழப்பிற்குரியவர்களாக இருக்கும் நிலையிலும் அவர்கள் ஆலிம்களின் பிள்ளைகள் என்ற காரணத்தால் மட்டும் அவர்கள் பெரும் அறிஞர்களாக அழைக்கப்படுகின்றனர். எவ்வித சான்றுகளுமின்றி மக்களுக்கு முன்னால் அவர்கள் எடுத்துவைக்கும் அறிவீனமான கூற்றுகளை ஏற்றுக் கொள்ளும்படி உலகத்திடம் கூறுகின்றனர்.

அதுபோன்ற நேரத்தில் ஒரு நபியே பயனளிக்க முடியும். அந்த விவகாரங்களுக்கு அவர் சிகிச்சை அளிக்கின்றார். அவர் தோன்றும்போது, தம்மை தாமே ஆலிம் என்று கூறிவரும் அறிவீனர் அவரை அடையாளம் காண்பதிலிருந்து இழப்பிற்குரியவராகிவிடுகிறார். மேலும் அறிவீனர் என்ற பெயரால் பிரபல்யமாகியிருந்த அறிஞர் தமது அகப்பார்வையாலும், பரிசுத்தமான இயல்பின் உதவியாலும் அவர் மீது ஈமான் கொள்கின்றார். அப்போது வானவர்கள் மற்றும் ஷைத்தானிற்குமிடையில் போர் ஆரம்பமாகி விடுகின்றது. நீண்ட காலமாக ஒடுக்கப்பட்ட பொதுமக்களுக்கு எழுச்சிபெறுவதற்கு சந்தர்ப்பம் கிடைத்துவிடுகிறது. மனிதத்துவம் மீண்டும் சுதந்திர காற்றை சுவாசிக்கின்றது. இந்த கருத்துதான் இந்த வசனத்தில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

(தஃப்ஸீரே கபீர் தொகுதி 4, பக்கம் 196-காதியான் பதிப்பு 2010)


பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.

Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

## ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் மகத்துவமிக்க கலீஃபா ராஷித், சித்தீக்கே அக்பர் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் சிறப்புகள் மற்றும் உயர் அந்தஸ்து

### யமாமா போரின் நிலவரங்கள் மற்றும் சம்பவங்களின் விளக்கம்

### முஸைலமா கஸ்ஸாப் கொலை செய்யப்பட்ட சம்பவம்

அபூஹஸீமாவே! என்ன தகவல் உள்ளது? என்று அவரிடம், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கேட்டார்கள். தூதரின் கலீஃபா அவர்களே! நல்ல செய்தி உள்ளது. அல்லாஹ் நமக்கு யமாமாவில் வெற்றி வழங்கிவிட்டான் என்று அவர் கூறினார். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் உடனடியாக நன்றி ஸஜ்தா செய்தார்கள் என்று அறிவிப்பாளர் கூறுகின்றார்.

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதுஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் இஸ்லாமாபாத்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 10 ஜூன் 2022,** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1401 ஆண்டு இஹ்ஸான் மாதம் **10ஆம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ
وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ
أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ○ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ○
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○
صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ○

ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களின் நற்குறிப்பில் யமாமா போர் பற்றிய குறிப்பு நடைபெற்றுக் கொண்டிருந்தது. இது தொடர்பாக மேலும் (விரிவாக) எடுத்துரைக்கப்பட்டுள்ளது. ஹஸ்ரத் அபூ ஸயீது குத்ரி (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: அப்பாது பின் பிஷர் அவர்களைக் நான் இவ்வாறு கூறக் கேட்டேன். அபூ ஸயீதே நாங்கள் புஸாஹா (போரிலிருந்து) வெளியேறிய போது, அந்த இரவில் நான் கனவில் கண்டேன். அதாவது வானம் திறக்கப்பட்டுவிட்டது. பின்னர் அது எனக்கு அடைக்கப்பட்டுவிட்டது. இதன் பொருள் ஷஹாதத் ஆகும்.

இன்ஷா அல்லாஹ் என்ன நடந்தாலும் நல்லதாகவே இருக்கும் என்று நான் கூறினேன் என்று அபூ ஸயீது கூறுகின்றார்கள். தொடர்ந்து அன்னார் கூறுகின்றார்கள். அதாவது யமாமா போர் நாளன்று நான் அன்னாரைக் பார்த்துக் கொண்டிருந்தேன். அன்னார் (ரலி), அன்சார் சகோதரர்களை அழைத்துக் கொண்டிருந்தார்கள். எங்கள் பக்கம் வாருங்கள் என்று அன்னார் கூறிக் கொண்டிருந்தார்கள். அதனால் 400 நபர்கள் திரும்பி வந்தனர். அவர்களில் பராஃ பின் மாலிக், அபூ தஜானா மற்றும் அப்பாது பின் பிஷர் ஆகியோர் முன்னணியில் இருந்தனர். எந்த அளவுக்கு என்றால், அவர்கள் அனைவரும் தோட்டத்தின் வாசலை அடைந்துவிட்டார்கள். அப்பாது பின் பிஷர் அவர்கள் ஷஹீதான பிறகு நான் அன்னாரைக் கண்டேன். அன்னாரின் முகத்தில் வாளின் ஏராளமான அடையாளங்கள் இருந்தன. அன்னாரின் உடலில் ஓர் அடையாளத்தை வைத்து நான் அன்னாரை அடையாளம் கண்டேன்.

அடுத்து ஹஸ்ரத் உம்மே அம்மாரா (ரலி) அவர்களின் குறிப்பு வருகின்றது. உம்மே அம்மாரா இஸ்லாமிய வரலாற்றின் ஏராளமான வீரமான பெண்களில் ஒரு சஹாபியாவாக இருந்தார்கள். அன்னாரின் பெயர் நுஸைபா பின்த் கஅப் ஆகும். அன்னார் உஹது போரிலும் கலந்து கொண்டிருந்தார்கள். மேலும் மிகவும் துணிவுடன் போரிட்டார்கள். முஸ்லிமகள் வெற்றியாளர்களாக இருந்த வரை குடத்தில் தண்ணீரை நிறைத்து நிறைத்து மக்களுக்கு தண்ணீர் வழங்கி வந்தார்கள். ஆனால், தோல்வியுற்ற போது அன்னார் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் வந்தடைந்தார்கள். மேலும் நெஞ்சை நிமிர்ந்தி நின்றார்கள். நிராகரிப்பாளர்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை நோக்கி முன்னேறியபோது, அன்னார் (ரலி) அவர்கள் அம்புகளைக் கொண்டும் வாள்களைக் கொண்டும் எதிரிகளை தடுத்து நிறுத்தி வந்தார்கள். உஹது போரில் எனது வலமும், இடமும் சமமாக அன்னார் (ரலி) போர் புரிந்து வந்ததை நான் நேரில் கண்டேன் என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். இப்னு கமிஅஃ என்பவன் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை வந்தடைந்தபோது ஹஸ்ரத் உம்மே அம்மாரா (ரலி) அவர்கள் முன்னால் வந்து அவனை தடுத்து நிறுத்தினார்கள். எனவே அவனது அந்த தாக்குதலில் அன்னார் (ரலி) அவர்களின் தோள்பட்டையில் ஆழமான காயம் ஏற்பட்டது. அன்னார் (ரலி) அவர்களும் அவன் மீது தாக்குதல் நடத்தினார்கள். ஆனால் அவன் இரண்டு போர் கவச உடைகளை அணிந்திருந்தான். எனவே அந்த தாக்குதல் பயனளிக்கவில்லை. எவ்வாறு இருப்பினும், இது அம்மாரா (ரலி) அவர்களின் வரலாற்று அந்தஸ்து ஆகும். அன்னார் (ரலி) அவர்களின் மகன், முஸைலமாவைக் கொன்றான் என்று அன்னார் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள். ஹஸ்ரத் அம்மாரா (ரலி) அவர்கள் யமாமா போரில் அந்த நாளன்று சுயமே கலந்து கொண்டிருந்தார்கள். மேலும் அதில் அன்னார் (ரலி) அவர்களின் ஒரு கரம் வெட்டுண்டது. ஹஸ்ரத் அம்மாரா (ரலி) அவர்கள் அந்தப் போரில் கலந்து கொண்டதற்கான காரணம் இவ்வாறு எடுத்துரைக்கப்படுகிறது. அதாவது அன்னாரின் மகன் ஹபீப் பின் ஸைது, ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் அவர்களுடன் உம்மானில் இருந்தார். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் மரணம் நிகழ்ந்தபோது, அந்த செய்தி அம்ர் அவர்களுக்கு கிடைத்தது. எனவே அன்னார் உம்மானிலிருந்து திரும்பினார்கள். வழியில் முஸைலமாவை அன்னாருக்கு எதிர் கொள்ள நேரிட்டது. ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்கள் முன்னால் சென்றுவிட்டார்கள். ஹபீப் பின் ஸைது மற்றும் அப்துல்லாஹ் பின் வஹப் பின்னால் இருந்தார்கள். அவர்கள் இருவரையும் முஸைலமா பிடித்துவிட்டான். நான் அல்லாஹ்வின் தூதர் ஆவேன் என்று நீங்கள் சாட்சி கூறுகின்றீர்களா? என்று அவன் கேட்டான். ஆம் என்று அப்துல்லாஹ் பின் வஹப் கூறினார். அவரை இரும்பு சங்கிலிகளால் கைது செய்யும் படி கட்டளையிட்டான். அவனுக்கு நம்பிக்கை ஏற்படவில்லை. உயிரை காப்பாற்றிக் கொள்ள அவர் இவ்வாறு கூறுவதாக அவன் எண்ணினான். எவ்வாறு இருப்பினும், நான் அல்லாஹ்வின் தூதர் ஆவேன் என்று நீர் சாட்சி கூறுகின்றீரா? என்று ஹஸ்ரத் ஹபீப் பின் ஸைது (ரலி) அவர்களிடம் கேட்டான். எனக்கு கேட்பதில்லை என்று அன்னார் (ரலி) கூறினார்கள். அதற்கு, முஹம்மது அல்லாஹ்வின் தூதர் ஆவார் என்று நீர் சாட்சி கூறுகிறீரா? என்று அவன் கேட்டான். ஆம் என்று அன்னார் (ரலி) கூறினார்கள். முஸைலமா அன்னாரைக் குறித்து

கட்டளை வழங்கினான். எனவே அன்னார் (ரலி) துண்டு துண்டாக்கப்பட்டார்கள். நான் அல்லாஹ்வின் தூதர் ஆவேன் என்று நீர் சாட்சி கூறுகின்றீரா? என அன்னாரிடம் கேட்கப்பட்டபோதெல்லாம் எனக்கு கேட்பதில்லை என்று அன்னார் (ரலி) கூறினார்கள். ஆனால் அதேநேரம் முஹம்மது அல்லாஹ்வின் தூதர் ஆவார் என்று நீர் சாட்சி கூறுகிறீரா? என்று கேட்கும்போது ஆம் என்று அன்னார் (ரலி) கூறினார்கள். எந்த அளவுக்கு என்றால் அவன் அன்னார் (ரலி) அவர்களின் ஒவ்வொரு உடல் உறுப்பாக வெட்டினான். அன்னார் (ரலி) அவர்களின் கரம் தோள்பட்டையிலிருந்து துண்டிக்கப்பட்டது. அன்னார் (ரலி) அவர்களின் கால்கள் மூட்டுகளின் மேல் வரை துண்டிக்கப்பட்டன. பின்னர் அன்னார் (ரலி) அவர்கள் நெருப்பில் எரிக்கப்பட்டார்கள். இந்த அனைத்து சம்பவங்களின் போதும் தமது கூற்றிலிருந்து அன்னார் (ரலி) அவர்களும் பின்வாங்கவில்லை. முஸைலமாவும் தனது கூற்றுகளிலிருந்து பின்வாங்கவில்லை. எந்த அளவுக்கு என்றால் அன்னார் (ரலி) அவர்கள் நெருப்பில் ஷஹீதாக்கப்பட்டார்கள்.

மற்றோர் அறிவிப்பின்படி, ஹஸ்ரத் ஹபீப் (ரலி) அவர்கள் முஸைலமாவிடம் கடிதம் எடுத்துச் சென்ற நேரத்தில் அவன் ஹஸ்ரத் ஹபீப் (ரலி) அவர்களை இவ்வாறு ஒவ்வொரு உறுப்பாக வெட்டி ஷஹீதாக்கினான். பின்னர் நெருப்பில் எரித்துவிட்டான். ஹஸ்ரத் உம்மே அம்மாரா (ரலி) அவர்களுக்கு தமது மகனின் ஷஹாதத் செய்தி கிடைத்தபோது, நான் சுயமே முஸைலமாவை எதிர்கொள்வேன். ஒன்று நான் அவனைக் கொல்வேன் அல்லது நான் சுயமே இறைவழியில் ஷஹீதாகிவிடுவேன் என்று அன்னார் (ரலி) சத்தியம் செய்தார்கள்.

ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்கள் யமாமாவிற்காக படையை தயார் செய்தபோது, ஹஸ்ரத் உம்மே அம்மாரா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் சென்றார்கள். மேலும் போரில் கலந்து கொள்வதற்கு அன்னார் (ரலி) அவர்களிடம் அனுமதி வேண்டினார்கள். அதற்கு, உங்களைப் போன்ற பெண்மணிகள் போருக்கு புறப்பட்டு செல்வதை எந்த விஷயமும் தடுக்க முடியாது. அல்லாஹ்வின் பெயரைக் கூறி புறப்படுங்கள் என்று அன்னார் (ரலி) அவர்கள் கூறினார்கள். இந்தப் போரில் அன்னாரின் மற்றொரு மகனாகிய அப்துல்லாஹ்வும் கலந்து கொண்டிருந்தார்.

அன்னார் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: நாங்கள் யமாமாவை சென்றடைந்தபோது கடுமையான போர் நடந்தது. அன்சார் சகோதரர்கள் உதவிக்காக அழைத்தனர். முஸ்லிம்கள் உதவிக்காக சென்றடைந்தனர். நாங்கள் தோட்டத்திற்கு முன்னால் சென்றடைந்தபோது, தோட்டத்தின் வாசல்கள் அடைக்கப்பட்டு விட்டன. எங்களது எதிரிகள் ஒரு பக்கம் இருந்தனர். அவர்கள் முஸைலமா இருந்த திசையில் இருந்தனர். நாங்கள் பலவந்தமாக உள்ளே நுழைந்துவிட்டோம். சிறிது நேரம் வரை அவர்களுடன் நாங்கள் போர் புரிந்தோம். அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான் அவர்களை விட தற்காத்துக் கொள்பவர்களை கண்டதில்லை. நான் இறைவனின் எதிரியை அடைவதற்கும், பார்ப்பதற்கும் எண்ணம் கொண்டேன்.

நான் அவனை பார்த்துவிட்டால் அவனை விடமாட்டேன். ஒன்று நான் அவனைக் கொல்வேன் அல்லது நான் சுயமே மடிந்துவிடுவேன் என்று நான் அல்லாஹ்விடம் உறுதி எடுத்தேன். மக்கள் தங்களுக்குள் தாக்குதல் தொடுத்தனர். அவர்களின் வாள்கள் அவர்களுக்கிடையே மோதிக் கொண்டன. அவர்கள் செவிடர்களாகிவிட்டது போன்று மோதிக் கொண்டனர். வாள் வீச்சின் சப்தத்தை தவிர வேறு எந்த சப்தமும் கேட்கவில்லை. எதுவரை என்றால் நான் அல்லாஹ்வின் எதிரியைப் பார்த்துவிட்டேன். நான் அவன் மீது தாக்குதல் தொடுத்தேன். அப்போது ஒருவன் என் முன்னால் வந்து எனது கையின் மீது தாக்குதல் நடத்தி அதனை வெட்டிவிட்டான். அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான் அந்த தீயவனை சென்றடைந்துவிட வேண்டும் என்பதால் நான் தடுமாறவில்லை. அவன் நிலத்தில் கிடந்தான். அங்கு நான் எனது மகன் அப்துல்லாஹ்வைக் கண்டேன். அவர் அவனைக் கொன்றுவிட்டார்.

அறிவிப்பில் இவ்வாறும் வருகிறது. அதாவது ஹஸ்ரத் உம்மே அம்மாரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: எனது மகன் தனது ஆடையால் தனது வாளை சுத்தம் செய்து கொண்டிருந்தான். முஸைலமாவை நீ கொன்றுவிட்டாயா? என்று நான் கேட்டேன். அதற்கு அவர், ஆம் எனது தாயே என்று கூறினார்.

நான் அல்லாஹ்விற்கு முன், நன்றி ஸஜ்தா செய்தேன். ஹஸ்ரத் உம்மே அம்மாரா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: அல்லாஹ் எதிரியின் ஆணிவேரை துண்டித்துவிட்டான். போர் முடிந்ததும் நான் எனது வீட்டிற்கு திரும்பினேன். அப்போது ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்கள் ஓர் அரபு மருத்துவரை என்னிடம் அழைத்து வந்தார்கள். அவர் கொதிக்கும் எண்ணெய்யால் எனக்கு சிகிச்சை அளித்தார். அல்லாஹ்வின் மீது ஆணையாக அந்த சிகிச்சை எனது கை வெட்டப்பட்டதை விட வேதனை அளிக்கக் கூடிய சிகிச்சையாக இருந்தது. ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்கள் என்னை மிகவும் கருத்தில் கொண்டு வந்தார்கள். மேலும் எம்முடன் அழகிய முறையில் நடந்து வந்தார்கள். எமக்கான உரிமையை எப்போதும் நினைவில் வைத்து வந்தார்கள். எம் தொடர்பாக ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் செய்த வஸிய்யத்தை பேணி வந்தார்கள்.

அப்பாது (என்பவர்) கூறுகின்றார்கள்: நான் கூறினேன். எனது தந்தை வழி பாட்டியே! யமாமா போரில் முஸ்லிம்களில் காயமடைந்தவர்களின் எண்ணிக்கை மிக அதிகமாக இருந்ததா? என்று நான் அன்னாரிடம் கேள்வி கேட்டேன். அன்னார் (ரலி) கூறினார்கள்: ஆம் எனது மகனே! அல்லாஹ்வின் எதிரி கொல்லப்பட்டான். முஸ்லிம்கள் அனைவருமே காயமடைந்திருந்தார்கள். நான் எனது இரண்டு சகோதரர்களை இந்த நிலைமையில் காயமுற்றிருந்ததை கண்டேன். அதாவது, அவர்கள் உயிருடன் இருப்பதற்கான எந்த அடையாளமும் தெரியவில்லை. மக்கள் பதினைந்து நாட்கள் போரில் நிலை கொண்டனர். போர் முடிந்திருந்தது. காயங்களின் காரணமாக மிகக் குறைவான அன்சார் மற்றும் முஹாஜிர் சகோதரர்களே ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களுடன் தொழுகையை நிறைவேற்றி வந்தார்கள்.

ஹஸ்ரத் உம்மே அம்மாரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நான் அறிவேன். பனூ தய் அந்த நாளன்று மிகவும் நன்றாக சோதிக்கப்பட்டார்கள். அந்த நாளன்று அதீ பின் ஹாதிமை உதவிக்காக அழைத்ததை கேட்டேன். பொறுமை செய்யுங்கள். எனது தாய்,தந்தை தங்கள் மீது அர்ப்பணம். எனது மகன் ஸைது அந்த நாளன்று மிகவும் தீரத்துடன் போரிட்டான்.

மற்றோர் அறிவிப்பில் இவ்வாறும் வருகிறது. அதாவது, ஹஸ்ரத் உம்மே அம்மாரா (ரலி) அவர்கள் காயமுற்றார்கள். வாள் மற்றும் ஈட்டியின் 11 காயங்கள் அன்னாருக்கு ஏற்பட்டன. அதுமட்டுமல்லாமல் அன்னார் (ரலி) அவர்களின் ஒரு கையும் துண்டானது. ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அன்னாரை நலம் விசாரிப்பதற்காக வருகை தந்தார்கள். கஅப் பின் உஜ்ரஃ அந்த நாளில் கடுமையாக போரிட்டார். அந்த நாளில் மக்களுக்கு கடுமையான பின்னடைவை சந்திக்க நேரிட்டது. மக்கள் தோல்வியடைந்து ஓடியவாறு படையில்

கடைசி பகுதியையும் தாண்டிச் சென்றார்கள். கஅப் அழைத்தார். அன்சார் சகோதரர்களே, அல்லாஹ் மற்றும் தூதருக்கு உதவி செய்ய வாருங்கள் என்று அழைத்தார். இவ்வாறு கூறியவாறு அன்னார் (ரலி) முஹிக்கம் பின் துஃபைல் வரை சென்றடைந்துவிட்டார்கள். முஹிக்கம் அன்னாரை தாக்கினான். மேலும் அன்னாரின் இடது கரத்தை வெட்டிவிட்டான்.

அல்லாஹ்வின் மீது ஆணையாக! கஅப் அதன் பின்னரும் தடுமாறவில்லை. மேலும் வலக்கரத்தால் தாக்குதல் நடத்தி வந்தார்கள். அதேநேரம் இடக்கரத்திலிருந்து இரத்தம் வழிந்து கொண்டிருந்தது. எந்த அளவுக்கு என்றால், அன்னார் தோட்டம் வரை சென்றடைந்துவிட்டார்கள். மேலும் அதில் நுழைந்துவிட்டார்கள். ஹாஜிப் பின் ஸைது அவ்ஸ் கோத்திரத்தை அழைத்தவாறு ஷஹ்லே! என்று கூறினார். ஸாபித் அவர்கள் அன்சாரே! அது எங்களது மற்றும் உங்களது படையாகும் என்று கூறும்படி கூறினார். அப்போது, அன்சார் சகோதரர்களே, அன்சார் சகோதரர்களே, என்று அன்னார் கூறினார்கள். எந்த அளவுக்கு என்றால், பனூ ஹனீஃபா, அவர்கள் மீது தாக்குதல் நடத்தினர். மக்கள் சிதறுண்டு விட்டனர். அன்னார் இரண்டு எதிரிகளை கொன்றுவிட்டார்கள். மேலும் சுயமே ஷஹீது ஆகி விட்டார்கள். அன்னாருடைய இடத்திற்கு உமைர் பின் அவ்ஸ் வந்துவிட்டார்கள். அன்னார் (ரலி) மீதும் எதிரிகள் தாக்குதல் நடத்தினர். அன்னாரும் ஷஹீது ஆகிவிட்டார்கள். பின்னர் அபூ அகீல் தொடர்பாக வருகிறது. அதாவது அபூ அகீல் அன்சார் கூட்டத்தினரின் தோழராக இருந்தார்கள். யமாமா போர் நாளன்று முதன் முதலில் போருக்காக அன்னார் (ரலி) புறப்பட்டார்கள். அன்னார் மீது ஓர் அம்பு பாய்ந்தது. அது தோள்பட்டையைக் கிழித்துக் கொண்டு இதயம் வரை சென்றடைந்து விட்டது. அன்னார் அந்த அம்பை இழுத்து வெளியே எடுத்தார்கள். அன்னார் அந்தக் காயத்தால் பலவீனம் அடைந்துவிட்டார்கள். அன்சார் சகோதரர்களே, எதிரி மீது தாக்குதல் நடத்த திரும்புங்கள் என்று மஃன் பின் அதீ அவர்கள் கூறியதை செவியுற்றார்கள். அபூ அம்ர் கூறுகின்றார்: அபூ அகீல் தமது கூட்டத்தினரின் பக்கம் செல்வதற்காக எழுந்தார்கள். அப்போது, அபூ அகீலே உங்களின் நோக்கம் என்ன? தங்களிடம் தற்போது போர் புரிவதற்கு ஆற்றல் இல்லை. மிகவும் பலவீனம் ஆகிவிட்டீர்கள் என்று நான் கூறினேன். அதற்கு, அழைப்பவர் எனது பெயரை குறிப்பிட்டு குரல் கொடுத்துள்ளார் என்று அன்னார் (ரலி) பதிலளித்தார்கள். அழைப்பவர், அன்சார் என்ற பெயரை மட்டுமே குறிப்பிட்டுள்ளார். மேலும் அந்த அழைப்பு காயமடைந்தவர்களுக்கு பொருந்தாது என்று நான் கூறினேன். நான் அன்சார் கூட்டத்தைச் சேர்ந்தவன் ஆவேன். மற்றவர்கள் பலவீனத்தை வெளிப்படுத்தினாலும் நான் நிச்சயமாக பதில் அளிப்பேன் என்று அபூ அகீல் பதில் அளித்தார்கள்.

இப்னு உமர் கூறுகின்றார்கள்:

அபூ அகீல் தைரியத்துடன் எழுந்தார்கள். தனது வலக்கரத்தில் திறந்த வாளை ஏந்தினார்கள். பின்னர், அன்சார் சகோதரர்களே! ஹுனைன் தினத்தைப் போன்று திரும்பி சென்று தாக்குங்கள் என்று விளித்தார்கள். அவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்துவிட்டார்கள். எதிரிகளுக்கு முன்னால் முஸ்லிம்களின் கேடயம் போன்று நின்றார்கள். எந்த அளவுக்கு என்றால், எதிரிகளை தோட்டத்திற்குள் நுழையும்படி நிர்பந்தித்துவிட்டார்கள். அவர்கள் தங்களுக்குள் ஒன்றிணைந்துவிட்டனர். அதாவது, உள்ளே சென்று மீண்டும் தீவிரமாக போர் நிகழ்ந்தது. ஒருவர் மற்றவருக்கெதிராக வாள்களை வீசினர். நான் அபூ அகீலைக் கண்டேன். அன்னாரின் காயமடைந்த கை தோள்பட்டையிலிருந்து துண்டாகி விட்டது. அன்னாரின் அந்தக் கை நிலத்தில் விழுந்து கிடந்தது. அன்னாருக்கு 14 காயங்கள் ஏற்பட்டன. அந்த அனைத்து காயங்களின் காரணமாக அன்னார் (ரலி) அவர்கள் ஷஹீது ஆனார்கள்.

இப்னு உமர் கூறுகின்றார்கள்: நான் அபூ அகீலிடம் சென்றேன். அப்போது அன்னார் (ரலி) அவர்கள் நிலத்தில் வீழ்ந்து கிடந்து கடைசி மூச்சை வாங்கிக் கொண்டிருந்தார்கள். அபூ அகீலே! என்று நான் அழைத்தேன். அப்போது அன்னார் நடுக்கத்துடன் லெப்பைக் என்று கூறினார்கள். பின்னர் யாருக்கு தோல்வி கிடைத்துள்ளது? என்று கேட்டார்கள். நற்செய்தி உண்டாகட்டுமாக. அல்லாஹ்வின் எதிரி முஸைலமா கொல்லப்பட்டுவிட்டான் என்று நான் உரத்த குரலில் கூறினேன். அப்போது, அன்னார் (ரலி) அவர்கள் அல்ஹம்துலில்லாஹ் என்று கூறியவாறு தமது விரலை விண்ணை நோக்கி உயர்த்தினார்கள். மேலும் உயிரை விட்டுவிட்டார்கள்.

இப்னு உமர் கூறுகின்றார்கள்: நான் எனது தந்தை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு இந்த அனைத்து சம்பவங்களையும் கூறினேன். அப்போது, அன்னார் (ரலி) மீது அல்லாஹ் கருணை செய்வானாக. எப்போதும் அன்னார் ஷஹீது ஆக வேண்டும் என்று ஆசைபட்டு வந்தார்கள். என்னைப் பொறுத்தவரை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் சில தேர்ந்தெடுக்கப்பட்ட சஹாபிகளில் ஒருவராக அன்னார் (ரலி) இருந்தார்கள் என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்.

முஜ்ஜாஅஃ பின் முராரஃ பனூ ஹனீஃபாவின் தலைவராக இருந்தான். முன்னரும் இது குறித்து கூறப்பட்டுவிட்டது. அவன் ஒரு நாள் மஃன் பின் அதீயை பற்றி குறிப்பிட்டார். அதாவது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்தில் அவர் என்னிடத்தில் வந்து செல்வார். எனக்கும் அவருக்கும் இடையில் துவக்கம் முதலே இருந்த இதே நட்பின் காரணமாக, வந்து சென்றார். முஜ்ஜாஃ கூறுகின்றார்: யமாமா போர் முடிந்த பிறகு அவர் ஹஸ்ரத் அபூ பக்ர் (ரலி) அவர்களிடம் வந்தபோது, அன்னார் (ரலி) அவர்கள் ஒரு நாள் ஷஹீதுகளின் மண்ணறைகளுக்கு தமது தோழர்களுடன் சென்று கொண்டிருந்தார்கள். நானும் அன்னார் (ரலி) அவர்களுடன் புறப்பட்டேன். எந்த அளவுக்கு என்றால், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) மற்றும் அன்னாரின் தோழர்கள் எழுபது சஹாபிகளின் கப்ர்களுக்கு சென்றார்கள். நான் கூறினேன். தூதரின் கலீஃபா அவர்களே! யமாமா போரில் பங்கு பெறக்கூடிய சஹாபிகளை விட வேறு எவரையும் வாள்வீச்சு தாக்குதல்களில் உறுதிப்பாட்டுடன் நிலை நிற்கக் கூடியவர்களாக கண்டதில்லை. அவர்களை விட அதிகமாக கடும் தாக்குதல் தொடுக்கக் கூடியவர்களையும் கண்டதில்லை. நான் அவர்களில் ஒருவரைக் கண்டேன். அல்லாஹ் அன்னாரின் மீது கருணை புரிவானாக. எனக்கும் அவருக்கும் நட்பு இருந்தது. அதற்கு, (அடையாளம் கண்டு கொண்டீர்களா?) அவர் மஃன் பின் அதீ தானே? என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கேட்டார்கள். அப்போது நான் ஆம் என்று கூறினேன். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் எனக்கும், அவருக்கும் இடையில் இருந்த நட்பை அறிந்திருந்தார்கள். அல்லாஹ் அவர் மீது கருணை புரிவானாக. நீர் ஒரு நல்லடியாரை நினைவுகூர்ந்துள்ளீர். என்று அன்னார் (ரலி) கூறினார்கள். அப்போது நான் கூறினேன். தூதரின் கலீஃபாவே, ஒருவகையில் நான் தற்போது கற்பனை கண்களில் அன்னாரை காண்கிறேன்.

நான் காலித் பின் வலீத் அவர்களின் கூடாரத்தில் கட்டப்பட்டிருந்தேன். முஸ்லிம்களின் பாதங்கள் தடுமாற்றம் அடைந்தன. எந்த அளவிற்கு தீவிரமாக பாதங்கள் தடுமாற்றம் அடைந்தன என்றால், இனி அவர்களின் பாதங்கள் மீண்டும் நிலைபெற முடியாது என்று நான் கருதினேன். அது எனக்கு

விரும்பத்தகாததாக இருந்தது.

உண்மையாகவே உமக்கு அது விரும்பத்தகாததாக இருந்ததா? என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கேட்டார்கள். ஏனென்றால் அவர் முர்தத் ஆகி இருந்தார். எனவே அவர் கைது செய்யப்பட்டிருந்தார். எவ்வாறு இருப்பினும், அவர் கூறுகின்றார்: அல்லாஹ்வின் மீது ஆணையாக! எனக்கு அது விரும்பத் தாகததாக இருந்தது என்று நான் கூறினேன். அதற்கு நான் அல்லாஹ்வை புகழ்கின்றேன் என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள்.

முஜ்ஜாஅஃ கூறுகின்றார்கள்: நான் மஃன் பின் அதீயை கண்டேன். அன்னார் தலையில் சிகப்பு நிற துணியை அணிந்து கொண்டு திரும்பியவாறு தாக்குதல் நடத்திக் கொண்டிருந்தார்கள். தோளில் வாளை வைத்திருந்தார்கள். அதிலிருந்து இரத்தம் வடிந்து கொண்டிருந்தது. அன்சார் சகோதரர்களே! முழு ஆற்றலுடன் தாக்குதல் நடத்துங்கள் என்று அன்னார் (ரலி) விளித்துக் கொண்டிருந்தார்கள்.

முஜ்ஜாஅஃ கூறுகின்றார்கள்: அன்சார் சகோதரர்கள் திரும்பி தாக்குதல் தொடுத்தனர். எதிரிகளின் பாதங்களை தடுமாற்றம் அடையச் செய்யும் வகையில் அவர்கள் மிகத் தீவிரமான தாக்குதலை தொடுத்தார்கள். நான் காலித் பின் வலீத் (ரலி) அவர்களுடன் வலம் வந்து கொண்டிருந்தேன். நான் பனூ ஹனீஃபாவின் கொலையுண்டவர்களை அடையாளம் கண்டிருந்தேன். நான் அன்சார் சகோதரர்களையும் பார்த்துக் கொண்டிருந்தேன். அவர்கள் ஷஹீது ஆகி கீழே விழுந்து கிடந்தார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் இதனைக் கேட்டுவிட்டு அழுதுவிட்டார்கள். எந்த அளவுக்கு என்றால் அன்னார் (ரலி) அவர்களின் அருளுக்குரிய தாடி கண்ணீரால் நனைந்துவிட்டது.

ஹஸ்ரத் அபூ ஸயீது குத்ரி (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: லுஹர் நேரம் வந்தபோது, நான் தோட்டத்தில் நுழைந்தேன். கடுமையான போர் நடந்து கொண்டிருந்தது. ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்கள் பாங்கு கொடுப்பவருக்கு கட்டளையிட்டார்கள். அவர் தோட்டத்தின் சுவரின் மீது ஏறி நின்று லுஹர் தொழுகைக்கான பாங்கு கொடுத்தார். மக்கள் போரின் காரணமாக துன்பத்திற்குள்ளாகி இருந்தார்கள். எந்த அளவுக்கு என்றால் அஸர் நேரத்திற்குப் பிறகு போர் முடிந்தது. அப்போது ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் லுஹர் மற்றும் அஸர் தொழுகையை எங்களுக்கு தொழவைத்தார்கள். பின்னர் அன்னார் (ரலி) அவர்கள் தண்ணீர் கொடுப்பவர்களை கொலையுண்டவர்களின் பக்கம் அனுப்பி வைத்தார்கள். நான் அன்னாருடன் வலம் வந்துகொண்டிருந்தேன். நான் அபூ அகீலுக்கு அருகில் கடந்து சென்றேன். அன்னாருக்கு 15 காயங்கள் ஏற்பட்டிருந்தன. அன்னார் என்னிடம் தண்ணீர் கேட்டார்கள். நான் அன்னாரை தண்ணீர் அருந்தச் செய்தேன். அப்போது அன்னாரின் அனைத்து காயங்களிலிருந்தும் தண்ணீர் வந்தது. மேலும் அன்னார் (ரலி) ஷஹீது ஆகிவிட்டார்கள். நான் பிஷ்ர் பின் அப்தில்லாஹ் அவர்களைக் கடந்து சென்றேன். அன்னார் தமது இடத்தில் அமர்ந்திருந்தார்கள். அன்னார் என்னிடம் தண்ணீர் கேட்டார்கள். நான் அன்னாரை தண்ணீர் அருந்தச் செய்தேன். அன்னாரும் ஷஹீது ஆகிவிட்டார்கள்.

மஹ்மூத் பின் வலீது அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்கள் யமாமா வாசிகளைக் கொலை செய்தபோது முஸ்லிம்களும் அந்தப் போரில் மிகப் பெரிய எண்ணிக்கையில் ஷஹீது ஆனார்கள். எந்த அளவுக்கு என்றால், பெரும்பாலான சஹாபிகள் ஷஹீது ஆகிவிட்டனர். முஸ்லிம்களில் உயிர் பிழைத்தவர்களில் பெரும்பாலார் காயமடைந்து இருந்தார்கள். (அல் இக்திஃபாஃ தொகுதி 2, பாகம் 1, பக்கம் 57-66, ஆலமுல் குதுப் பெய்ரூத்-1997) (ஸயீது அன்சாரியின் சீரதுஸ் ஸஹாபியாத்-பக்கம் 122, முஷ்தாக் புக் கார்னர் லாஹூர்)

முஸைலமா கொலை செய்யப்பட்ட தகவல் ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களுக்கு வழங்கப்பட்டபோது, முஸைலமாவை அடையாளம் காண்பதற்காக அன்னார் முஜ்ஜாஅஃவை சங்கிலியால் கட்டி தம்முடன் கொண்டு வந்தார்கள். அவன் சடலங்களில் முஸைலமாவைத் தேடிக் கொண்டிருந்தான். ஆனால் அங்கு முஸைலமா கிடைக்கவில்லை. பின்னர் அவன் தோட்டத்திற்குள் நுழைந்தான். அப்போது நடுத்தரமான உயரம், மஞ்சள் நிறமான, தட்டையான மூக்கு கொண்ட நபரின் சடலம் தென்பட்டது. அப்போது, நீங்கள் எவனிடமிருந்து விடுதலை பெற்றுள்ளீர்களோ அந்த முஸைலமா இவன் ஆவான் என்று முஜ்ஜஜாஅஃ கூறினான்.

அதற்கு, உங்களுடன் இவை அனைத்தையும் செய்த நபர் இவன் ஆவான் என்று ஹஸ்ரத் காலித் (ரலி) கூறினார்கள். முஜ்ஜாஅஃ கைதியாக இருந்தான். அவன் பனூ ஹனீஃபாவின் பிரதிநிதியாக இருந்தான். தலைவராக இருந்தான். எனவே அவர்களை அவன் காப்பாற்ற விரும்பினான். ஆண்களில் பெரும்பாலார் மரணித்திருந்தனர். ஆனால் அவன் ஒரு திட்டம் தீட்டினான். கோட்டையில் அடைபட்டுக் கிடந்த எஞ்சிய மக்களை காப்பாற்றுவதற்காக அவன் சதி செய்தான். அவன் ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்களுடன் ஒரு சமாதான உடன்படிக்கை செய்தான். அவன் ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்களிடம் இவ்வாறு கூறினான்: உங்களுக்கு எதிராக போர் புரிய புறப்பட்ட இந்த மக்கள் வெறும் அவசரக்காரர்கள் ஆவர். ஆனால் கோட்டையினுள் இன்னும் போர் வீரர்கள் நிறைந்து உள்ளனர்.

அதற்கு, நீ நாசமடைவாயாக! நீ என்ன கூறுகின்றாய்? என்று ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் கூறினார்கள். அப்போது, இறைவன் மீது ஆணையாக! நான் கூறுபவையெல்லாம் முற்றிலும் உண்மையாகும். எனவே வாருங்கள்! எனக்கு பின்னால் உள்ள எனது சமுதாயத்தின் சார்பாக என்னிடம் சமாதானம் செய்து கொள்ளுங்கள் என்று முஜ்ஜாஅஃ கூறினான். இவ்வாறு கூறி அவன் ஏமாற்றினான்.

எவ்வாறு இருப்பினும், பிறகு இதன் விளக்கம் தரப்படும். அந்த அபாயகரமான போரில் முஸ்லிம்களுக்கு ஏற்பட்டிருந்த உயிர் இழப்புகளை ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்கள் பார்த்திருந்தார்கள்.

எனவே அதனை கருத்தில் கொண்டவாறு தற்போது பனூ ஹனீஃபாவின் தலைவனும், அசல் கிளர்ச்சியாளனுமான முஸைலமா தனது கூட்டாளிகளுடன் கொல்லப்பட்டுவிட்டதாலும் தற்போது முஸ்லிம்களின் தரப்பில் மேலும் உயிர் இழப்புகளை ஏற்படுத்தாமல் இருப்பதை உகந்ததாக அன்னார் (ரலி) கருதினார்கள். எனவே ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் சமாதானம் செய்து கொள்வதற்கு சம்மதம் தெரிவித்தார்கள். ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் சார்பாக சமாதானத்திற்கான உத்ரவாதத்தை பெற்றுக் கொண்டு, நான் அவர்களிடம் சென்று அவர்களுடன் ஆலோசனை செய்கிறேன் என்று முஜ்ஜாஅஃ கூறினான். பின்னர் அவன் அவர்களிடம் சென்றுவிட்டான். ஆனால், கோட்டைகளில் பெண்கள், குழந்தைகள், மிகவும் முதுமையை அடைந்த வயதானவர்கள் மற்றும் பலவீனமானவர்களைத் தவிர வேறு எவரும் இல்லை என்பதை அவன் நன்கறிந்திருந்தான். அவன் அவர்களுக்கு கவசங்களை அணிவித்தான். மேலும் நான் திரும்பி வரும்வரை கோட்டையின் சுவர்களில் ஏறிவிடும் படி பெண்களிடம் கூறினான். பின்னர் அவன் ஹஸ்ரத் காலித்

(ரலி) அவர்களிடம் வந்தான். மேலும், நான் எந்த நிபந்தனைகளின்படி சமாதான உடன்படிக்கை செய்தேனோ அதனை அவர்கள் ஏற்கவில்லை என்று கூறினான். ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் கோட்டையின் பக்கம் பார்த்தபோது, அது மனிதர்களால் நிரம்பியவாறு தென்பட்டது. அவன் பெண்களுக்கு கவசம் அணிவித்து அங்கு நிறுத்திவிட்டு வந்திருந்தான். அந்தப் போர் முஸ்லிம்களுக்கும் இழப்புகளை ஏற்படுத்தியிருந்தது. போர் மிகவும் நீண்டதாக ஆகி இருந்தது. எனவே வெற்றி பெற்று திரும்பி செல்ல வேண்டும் என்று முஸ்லிம்கள் விரும்பினர். ஏனென்றால் அடுத்து என்ன நடக்க இருக்கிறது? என்பதை முஸ்லிம்கள் அறியாதவர்களாக இருந்தனர். எனவே ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் முன்பைக் காட்டிலும் மென்மையான நிபந்தனைகளில், தங்கம், வெள்ளி, ஆயுதங்கள் மற்றும் பாதி கைதிகளின் நிபந்தனையின் கீழ் சமாதானம் செய்து கொண்டார்கள். நான்கில் ஒரு பங்கு என்ற அடிப்படையில் சமாதானம் செய்தார்கள் என்றும் கூறப்படுகிறது. கோட்டைகளின் வாசல்கள் திறக்கப்பட்டபோது பெண்கள், குழந்தைகள், மற்றும் பலவீனமானவர்களைத் தவிர வேறு யாருமே இருக்கவில்லை. அப்போது, ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள், நீ என்னை ஏமாற்றிவிட்டாய் என்று முஜ்ஜாஅஃவிடம் கூறினார்கள். அதற்கு,முஜ்ஜாஅஃ, இவர்கள் எனது சமுதாயத்து மக்கள் ஆவர். அவர்களை பாதுகாப்பது எனக்கு அவசியமானதாக இருந்தது. இதை தவிர்த்து நான் வேறு என்ன செய்திருக்க முடியும்? என்று கூறினான். அதன் பிறகு வயதுக்கு வந்த அனைத்து ஆண்களும் கொல்லப்பட வேண்டும் என்ற ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் கடிதம் கிடைத்தது. ஆயினும், ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் அந்த மக்களிடம் சமாதனம் செய்து கொண்டுவிட்ட பிறகே அந்த கடிதம் கிடைத்தது. எனவே அன்னார் (ரலி) அவர்கள் உடன்படிக்கையை முழுமை செய்தார்கள். உடன்படிக்கையை முறிக்கவில்லை. (அல்காமில் ஃபித்தாரீக் லி இப்னி அஸீர் தொகுதி 2, பக்கம் 222-223 தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத் 2006)

அந்த மக்களின் உயிர்களுக்கு பாதுகாப்பு வழங்கியிருந்தார்கள். எனவே ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்கள் முஸ்லிம்களின் நிலை மற்றும் சமாதான உடன்படிக்கையின் காரணங்களைக் கூறுவதற்காக ஹஸ்ரத அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு ஒரு கடிதத்தை அனுப்பினார்கள். அதனை படித்துவிட்டு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் மனநிறைவும், மகிழ்ச்சியும் அடைந்தார்கள்.

ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் சமாதான உடன்படிக்கை செய்து முடித்துவிட்ட பிறகு, அன்னார் (ரலி) அவர்கள் கோட்டைகள் தொடர்பாக கட்டளையிட்டார்கள். எனவே அங்கு ஆட்கள் நியமிக்கப்பட்டார்கள். அல்லாஹ்வின் மீது ஆணையாக எந்த விஷயங்களில் சமாதான உடன்படிக்கை செய்யப்பட்டுள்ளதோ அவற்றில் எதுவும் தங்களிடமிருந்து மறைவாக இருக்காது. மறைவான விஷயத்தை அறிந்த எந்த ஒருவரைக் குறித்தும் ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் வரை தகவல் எட்ட வைக்கப்படும் என்று முஜ்ஜாஅஃ சத்தியம் செய்தான். பின்னர் கோட்டை திறந்துவிடப்பட்டது. ஏராளமான ஆயுதங்கள் பறிமுதல் செய்யப்பட்டன.அதனை ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் தனியாக ஒன்றுகூட்டினார்கள். அந்தக் கோட்டையிலிருந்து கிடைத்த தீனார்கள் மற்றும் தர்ஹம்களையும் தனியாக ஒன்று கூட்டினார்கள். அவர்களின் போர் கவசங்களும் ஒன்று கூட்டப்பட்டன. பின்னர் கைதிகள் வெளியேற்றப்பட்டனர். அவர்கள் இரு பகுதிகளாக பிரிக்கப்பட்டார்கள். பின்னர் போர் செல்வங்கள் சீட்டு குலுக்கி போடப்பட்டன. மேலும் போர்கவசங்கள், இரும்பு சங்கிலிகள், தங்கம், வெள்ளி போன்ற பொருட்கள் எடைபோடப்பட்டன. அவற்றில் ஐந்தில் ஒரு பங்கு தனியாக எடுத்து வைக்கப்பட்டது. ஐந்தில் நான்கு பங்கு மக்களுக்கு பங்கிடப்பட்டு வழங்கப்பட்டது. குதிரை சவாரி வீரர்களுக்கு இரண்டு பங்கு நிர்ணயிக்கப்பட்டது. குதிரையின் முதலாளிகளுக்கு ஒரு பங்கு நிர்ணயிக்கப்பட்டது. அவை எல்லாவற்றிலும் ஐந்தில் ஒரு பங்கு தனியாக எடுத்து வைக்கப்பட்டது. அவை அனைத்திலும் கம்ஸ் எனும் ஐந்தில் ஒரு பங்கும் ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. (அல் இக்திஃபா தொகுதி 2,பக்கம் 70-71, ஆலமுல் குதுப் பெய்ரூத்-1997)

அதன் பிறகு பனூ ஹனீஃபா பைஅத் செய்வதற்காகவும், முஸைலமாவின் நபித்துவத்திலிருந்து தொடர்பின்மையை வெளிப்படுத்துவதற்காகவும் ஒன்று கூடினார்கள். அந்த அனைத்து மக்களும் ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களிடம் கொண்டு வரப்பட்டார்கள். அங்கு அவர்கள் பைஅத் செய்தனர். மேலும் தாங்கள் மீண்டும் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டதை அறிவிப்பு செய்தார்கள். ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்கள் அந்த மக்களின் ஒரு குழுவினரை ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களிடம் மதீனாவிற்கு அனுப்பி வைத்தார்கள். அந்த மக்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களை வந்தடைந்தபோது, கடைசியில் நீங்கள் எப்படி முஸைலமாவின் சதிவலையில் சிக்கிக் கொண்டீர்கள்? மேலும் எப்படி வழிகெட்டுப் போனீர்கள்? என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் மிகவும் ஆச்சரியத்தை வெளிப்படுத்தினார்கள்.

அதற்கு, தூதரின் கலீஃபாவே! எங்களுடைய நிலைமைகள் அனைத்தையும் தாங்கள் அறிவீர்கள் என்று அந்த மக்கள் பதிலளித்தனர். முஸைலமா தனக்கும் எந்த பயனையும் சேர்க்கவில்லை. அவனது உறவினர்களுக்கும், அவனது சமுதாயத்திற்கும் அவனால் எந்த நன்மையும் கிடைக்க முடியவில்லை.

(முஹம்மது ஹுஸைன் ஹேகல் அவர்களின் நூல்-ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்கள், பக்கம்-206)

ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களின் ஒரு கனவைப் பற்றிய குறிப்பு உள்ளது. ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் யமாமாவை நோக்கி ஹஸ்ரத் காலித் பின் வலீதை அனுப்பியபோது அன்னார் (ரலி) அவர்கள் கனவில் இவ்வாறு கண்டார்கள். அதாவது, அன்னார் (ரலி) அவர்களிடம் ஹஜஸ் என்ற ஊர் உள்ளது. அதன் பேரீத்தம் பழங்களிலிருந்து சில பேரீத்தம் பழங்கள் கொண்டு வரப்பட்டன. அன்னார் (ரலி) அவர்கள் அவற்றிலிருந்து ஒரு பேரீத்தம் பழத்தை சாப்பிட்டார்கள். அதன் ஒரு கொட்டை பேரீத்தம் பழ வடிவில் இருப்பதைக் கண்டார்கள். அது மிகவும்


**நபிமொழியிலிருந்து...**

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

**திருக்குர்ஆனிலிருந்து...**

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

**திருக்குர்ஆனிலிருந்து...**

அவர்கள் இரவு நேரத்தில் குறைவாகவே துயில் கொண்டனர். (54:18)

A. Shamsul Alam
(Gen.Sec. Melapalayam)

கடினமாக இருந்தது. அது பேரீத்தம் பழமாக இருக்கவில்லை. மாறாக, அது கொட்டையாக இருந்தது. சிறிது நேரம் அன்னார் (ரலி) அவர்கள் அதனை மென்றார்கள். பின்னர் அதனை வீசிவிட்டார்கள். அன்னார் (ரலி) அவர்கள் இந்தக் கனவிற்கு இவ்வாறு விளக்கம் அளித்தார்கள். அதாவது, ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களுக்கு யமாமா வாசிகளிடமிருந்து கடுமையான போரை சந்திக்க நேரிடும். மேலும் அல்லாஹ், நிச்சயமாக அவரது கரங்களால் வெற்றியை வழங்கிவிடுவான். (அல் இக்திஃபா பித்தாரீக் தொகுதி 2, பக்கம் 72, ஆலமுல் குதுப்-பெய்ரூத் 1997)

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் யமாமாவிலிருந்து வருகின்ற செய்திகளுக்காக மிகவும் அதிகமாக எதிர்பார்த்து காத்திருந்தார்கள். ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களிடமிருந்து தூதுவர் வந்தவுடன் அன்னார் (ரலி) அவர்கள் அவரிடமிருந்து தகவல்களை பெற்றுக் கொள்வார்கள். ஒரு நாள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் மதியவேளையில் வெயிலில் புறப்பட்டார்கள். அன்னார் (ரலி) அவர்கள் ஸிரார் எனும் இடத்திற்கு செல்ல விரும்பியிருந்தார்கள். அது மதீனாவிலிருந்து மூன்று மைல் தொலைவில் அமைந்திருந்தது. அன்னார் (ரலி) அவர்களுடன் ஹஸ்ரத் உமர் (ரலி), ஹஸ்ரத் ஸயீத் பின் ஸைது (ரலி), தல்ஹா பின் உபைதில்லாஹ் (ரலி) ஆகியோரும், முஹாஜிர் மற்றும் அன்சார் சகோதரர்களின் ஒரு கூட்டமும் இருந்தது. ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் அனுப்பியிருந்த அபூ களீமா புகாரியை அன்னார் (ரலி) அவர்கள் சந்தித்தார்கள். அவரை ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் பார்த்தபோது, அபூ களீமாவே! என்ன செய்தி? என்று கேட்டார்கள்.

அதற்கு, தூதரின் கலீஃபா அவர்களே! நல்ல செய்தி உள்ளது. அல்லாஹ் நமக்கு யமாமாவில் வெற்றியை வழங்கியுள்ளான் என்று அவர் கூறினார்.

அறிவிப்பாளர் கூறுகின்றார்: ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் நன்றி ஸஜ்தா செய்தார்கள். தங்களின் பெயரில் ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களின் கடிதம் உள்ளது என்று அபூ களீமா கூறினார். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) மற்றும் அன்னார் (ரலி) அவர்களின் தோழர்கள் அல்லாஹ்வை புகழ்ந்தனர்.

பின்னர், போர் எப்படி இருந்தது? என்று எனக்கு போரைப் பற்றிக் கூறுங்கள் என்று அன்னார் (ரலி) அவர்கள் கூறினார்கள். காலித் (ரலி) அவர்கள் என்னென்ன செய்தார்கள்?, தமது தோழர்களை எவ்வாறு அணிவகுக்கச் செய்தார்கள்? முஸ்லிம்களுக்கு எவ்வாறு பின்னடைவு ஏற்பட்டது? மேலும் அவர்களில் யாரெல்லாம் ஷஹீது ஆனார்கள் என்பதையும் அபூ களீமா அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு கூறத் தொடங்கினார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் اِنَّا لِلّٰهِ وَاِنَّا اِلَيْهِ رَاجِعُوْنَ என்று ஓதத் தொடங்கினார்கள். மேலும் அவர்கள் மீது அல்லாஹ் கருணை காட்டுவதற்காக துஆ செய்தார்கள். அபூ களீமா தொடர்ந்து கூறினார்: தூதரின் கலீஃபாவே! நாங்கள் காட்டரபிகள் ஆவோம். அவர்கள் எங்களை தோல்வியுறச் செய்தார்கள். நாங்கள் நல்லதாக கருதாதபடி அவர்கள் எங்களுடன் நடந்து கொண்டார்கள். அதன் பிறகு அல்லாஹ் எங்களுக்கு அவர்கள் மீது வெற்றியை வழங்கினான். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: நான் கனவில் கண்டவற்றை மிகவும் வெறுத்து வந்தேன். காலித் (ரலி) அவர்களுக்கு கடுமையான போரை நிச்சயம் சந்திக்க நேரிடும் என்று எனது உள்ளத்தில் எண்ணம் தோன்றியது. அந்தோ! காலித் (ரலி) அவர்கள் அந்த மக்களுடன் சமாதான உடன்படிக்கை செய்யாமல் இருந்திருக்க வேண்டுமே! அவர்களை வாளின் முனையில் வைத்திருக்க வேண்டுமே! அந்த ஷஹீதுகளுக்குப் பிறகு யமாமா வாசிகளில் உயிருடன் இருப்பதற்கு எவருக்கு உரிமை உள்ளது?

அன்னார் (ரலி) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ் காப்பாற்றினால் தவிர, அந்த மக்கள் தமது தோழரின் காரணமாக அதாவது, அந்த முஸைலமா கஸ்ஸாபின் காரணமாக கியாமத் வரை சோதனையில் இருப்பார்கள். அதன் பிறகு, யமாமா வாசிகளின் அந்தக் குழுவினர் ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களுடன் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் சமூகத்தில் ஆஜரானார்கள். (அல் இக்திஃபாஃ தொகுதி 2, பாகம் 1, பக்கம் 172 - ஸவார் அகாடமி கராச்சி 2004)

கொலையுண்டவர்களின் எண்ணிக்கை குறித்து இவ்வாறு கூறப்படுகிறது. அதாவது, இந்த போரில் கொலை செய்யப்பட்ட முர்தத்களின் எண்ணிக்கை சுமார் பத்தாயிரம் ஆகும். மேலும் மற்றோர் அறிவிப்பில் இருபத்தி ஓராயிரம் என்றும் கூறப்பட்டுள்ளது. அதேநேரம்சுமார் ஐநூறு அல்லது ஆறு நூறு முஸ்லிம்கள் ஷஹீது ஆகினர். சில அறிவிப்புகளில், யமாமா போரில் ஷஹீதாகிய முஸ்லிம்களின் எண்ணிக்கை ஏழு நூறு என்றும், ஆயிரத்து நூறு என்றும், ஆயிரத்து எழுநூறு என்றும் கூறப்பட்டுள்ளது. (அல்பதாயா வன் னஹாயா தொகுதி 3, பாகம்6, பக்கம் 321 தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத் 2001) (ஃபுதூஹ் அல்பல்தானில் இமாம் அபீ அல் ஹஸன் அஹ்மது பின் யஹ்யா அல் பலாஸரி பக்கம் 63,தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத் 2000)

மற்றோர் அறிவிப்பிற்கு ஏற்ப அந்தப் போரில் ஷஹீது ஆகியவர்களில் எழுநூறுக்கும் அதிகமான திருக்குர்ஆனை மனனம் செய்த ஹாஃபிழ்கள் இருந்தனர். (அப்துல் காரி ஷரஹ் ஸஹீஹ் புகாரி, கிதாப் ஃபஸாயிலுல் குர்ஆன் பாடம் ஜமஅல் குர்ஆன், தொகுதி 20, பக்கம் 23, தாருல் குதுபில் இல்மிய்யா 2001)

அந்த ஷஹீதுகளில் பெரும் சஹாபிகளும், திருக்குர்ஆனை மனனம் செய்திருந்தவர்களும் அடங்குவர். அவர்களின் அந்தஸ்தும், மரியாதையும் முஸ்லிம்களுக்கு மத்தியில் மிகவும் உயர்ந்ததாக இருந்தது. அவர்களின் ஷஹாதத் ஒரு மாபெரும் துக்ககரமான நிகழ்வாக இருந்தது. ஆயினும் திருக்குர்ஆனை மனனம் செய்திருந்த அந்த ஹாஃபிழ்களின் ஷஹாதத் சம்பவமே திருக்குர்ஆனை ஒன்று திரட்டுவதற்கான காரணியாக அமைந்தது.

அந்த ஷஹீதுகளில் சில பிரபல்யமான சஹாபிகளின் பெயர்கள் இவையாகும். ஹஸ்ரத் ஸைது பின் கதாப் (ரலி), ஹஸ்ரத் அபூ ஹுஸைஃபா பின் உத்பா பின் ரபீஅஃ (ரலி), ஹஸ்ரத் ஸாலிம் மவ்லா அபூ ஹுஸைஃபா (ரலி), ஹஸ்ரத் காலித் பின் உஸைது (ரலி), ஹஸ்ரத் ஹகம் பின் ஸயீது (ரலி), ஹஸ்ரத் துஃபைல் பின் அம்ர் தவ்ஸி (ரலி), ஹஸ்ரத் ஸுபைர் பின் அவ்வாம் (ரலி) அவர்களின் சகோதரரான ஹஸ்ரத் ஸாயிப் பின் அவ்வாம் (ரலி),ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஹாரிஸ் பின் கைஸ் (ரலி), ஹஸ்ரத் அப்பாது பின் ஹாரிஸ் (ரலி), ஹஸ்ரத் அப்பாது பின் பிஷர் (ரலி), ஹஸ்ரத் மாலிக் பின் அவ்ஸ் (ரலி), ஹஸ்ரத் சுராகா பின் கஅப் (ரலி), ஹஸ்ரத் மஃன் பின் அதீ (ரலி), ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் பேச்சாளர் ஹஸ்ரத் ஸாபித் பின் கைஸ் பின் ஷம்மாஸ் (ரலி), ஹஸ்ரத் அபூதஜானா (ரலி), நயவஞ்சகர்களின் தலைவனான அப்துல்லாஹ் பின் உபைஃ பின் சுலூலின் மகன், நம்பிக்கையாளரும், உண்மையாளருமான ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அப்தில்லாஹ் மற்றும் ஹஸ்ரத் யஸீது பின் ஸாபித் ஹஸ்ரஜி (ரலி) ஆகியோர் ஆவர். (ஃபுதூஹுல் பல்தான் பக்கம் 124-126, பதிப்பு முஅஸ்ஸஸா அல்மஃரூஃப் பெய்ரூத் 1987)

சில வரலாற்று ஆசிரியர்களின் பார்வையில் யமாமா போர் ரபீவுல் அவ்வல்

மாதம் ஹிஜ்ரி 12 ஆம் ஆண்டு நடைபெற்றது. அதேநேரம் சிலர் அது ஹிஜ்ரி 11ஆம் ஆண்டின் இறுதியில் நிகழ்ந்ததாக கூறுகின்றனர். இந்த இரண்டு கூற்றுகளையும் நாம் இவ்வாறு பொருத்தி காட்ட முடியும். அதாவது, அந்த போர் ஹிஜ்ரி 11ஆம் ஆண்டு ஆரம்பமானது. மேலும் அது ஹிஜ்ரி 12 ஆம் ஆண்டு முடிவுற்றது. (அல் பதாயா வன் னஹாயா தொகுதி 3, பாகம் 2,பக்கம் 322, ஹிஜ்ரி 11ஆம் ஆண்டு, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத் 2001)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

நபித்துவம் வாதம் செய்த மக்களும், சஹாபிகள் எவர்களுடன் போர் புரிந்தார்களோ அவர்களும், அனைவருமே இஸ்லாமிய அரசாங்கத்திற்கு எதிராக கிளர்ச்சி செய்யக் கூடியவர்களாக இருந்தனர். அந்த மக்கள் இஸ்லாமிய அரசாங்கத்திற்கு எதிராக போருக்கான அறிவிப்பை செய்திருந்தனர்.

அரேபியாவின் பாதி தேசம் நமக்கானது. பாதி தேசம் குரைஷியர்களுக்கானது என்று தனக்கு கட்டளை தரப்பட்டுள்ளதாக முஸைலமா, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்தில் அன்னார் (ஸல்) அவர்களுக்கு சுயமே எழுதினான். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மரணத்திற்குப் பிறகு, அன்னார் (ஸல்) அவர்களால் நியமிக்கப்பட்டிருந்த ஆளுநர் சுமாமாஃ பின் உஸாலை அவன் வெளியேற்றிவிட்டான். மேலும், அவன் சுயமே அந்தப் பகுதியின் ஆளுநராகிவிட்டான். மேலும் அவன் முஸ்லிம்கள் மீது தாக்குதல் நடத்திவிட்டான். அதேபோன்று, மதீனாவின் இரண்டு சஹாபிகளான ஹபீப் பின் ஸைது (ரலி) மற்றும் அப்துல்லாஹ் பின் வஹப் ஆகியோரை அவன் கைது செய்துவிட்டான். பலவந்தமாக தனது நபித்துவத்தை அவர்களை ஏற்கச் செய்ய வேண்டும் என்று அவன் விரும்பினான். அப்துல்லாஹ் பின் வஹப் அச்சமடைந்து அவனது கூற்றை ஏற்றுக் கொண்டுவிட்டார். ஆனால், ஹஸ்ரத் ஹபீப் பின் ஸைது (ரலி) அவர்கள் அவனது கூற்றை ஏற்க மறுத்துவிட்டார்கள். அதனால் முஸைலமா அவரது உடல் உறுப்புகளை ஒவ்வொன்றாக வெட்டி நெருப்பில் எரித்துவிட்டான்.

அதேபோன்று, ஏமனிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நியமித்திருந்த அதிகாரிகளில் சிலரை அவன் கைது செய்துவிட்டான். மேலும் சிலருக்கு கடுமையான தண்டனை கொடுக்கப்பட்டது. அதேபோன்று, தபரி வரலாற்று நூலில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது. அதாவது, அஸ்வது அன்ஸியும் கிளர்ச்சியின் கொடியை உயர்த்தினான். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் சார்பாக நியமிக்கப்பட்டிருந்த அதிகாரிகளுக்கு அவன் தொல்லை கொடுத்தான். அவர்களிடமிருந்து ஸகாத் தொகைகளை பறிப்பதற்கு கட்டளை வழங்கியிருந்தான். ஏராளமான முஸ்லிம்களை அவன் கொலை செய்தான். கொள்ளை அடித்தான். கவர்னரை கொலை செய்தான். அவரை கொலை செய்த பிறகு அவரது முஸ்லிம் மனைவியை பலவந்தமாக திருமணம் செய்து கொண்டான். பனூ நஜ்ரான் கோத்திரமும் கிளர்ச்சி செய்தது. அவர்களும் அஸ்வது அன்ஸியுடன் இணைந்து கொண்டனர். அவர்கள் அம்ர் பின் ஹஸ்ம் (ரலி) மற்றும் காலித் பின் ஸயீது (ரலி) என்ற இரண்டு சஹாபிகளை தமது பகுதியிலிருந்து வெளியேற்றினர்.

இறைத் தூதர் (ஸல்) அவர்களின் உம்மத்திலிருந்து நபித்துவ வாதிகள் வாதம் செய்தார்கள். மேலும், அவர்கள் இறைத் தூதர் (ஸல்) அவர்களின் மார்க்கத்தை பரப்புவதாக வாதம் செய்தார்கள் என்ற காரணத்தால் நபித்துவ வாதிகளுடன் போர் செய்யப்படவில்லை. மாறாக, அவர்கள் இஸ்லாமிய ஷரீஅத்தை ரத்துசெய்துவிட்டு தமது சொந்த சட்டங்களை அமல்படுத்தினார்கள். மேலும், தத்தமது பகுதிகளில் தனி அரசாங்கத்திற்கான வாதம் புரிந்தனர். அவர்கள் தமது பகுதியின் தனி அரசாங்கத்திற்கான வாதம் மட்டும் செய்யவில்லை. மாறாக அவர்கள் சஹாபிகளை கொலை செய்தனர். எனவே இந்த அனைத்து காரணங்களினால் மட்டுமே சஹாபிகள், அவர்களுடன் போர் செய்தனர். (மவ்லானா மவ்தூதி சாஹிபின் காதியானி விவகாரம் என்ற நூலிற்கான பதில், அன்வாருல் உலூம் தொகுதி 24, பக்கம் 12 -14)

இஸ்லாமிய நாடுகளின் மீது அவர்கள் தாக்குதல் நடத்தினர். ஏற்கனவே நிலைபெற்றிருந்த அரசாங்கங்களுக்கு எதிராக அவர்கள் கிளர்ச்சி செய்து, தமது விடுதலைக்கான அறிவிப்பையும் செய்தனர்.

அடுத்து, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் மறைவிற்குப் பிறகு, அரபுக் கோத்திரங்களின் குடிமக்கள் முர்தத் ஆகிவிட்டனர். அதுபோன்ற மோசமான நேரத்தை ஹஸ்ரத் ஆயிஷா சித்தீகா (ரலி) அவர்கள் இவ்வாறு வெளிப்படுத்தியுள்ளார்கள். அதாவது, இறைத் தூதர் (ஸல்) அவர்கள் மரணமடைந்து விட்டார்கள். மேலும் சில பொய் நபித்துவ வாதிகள் தோன்றியிருந்தனர். சில மக்கள் தொழுகையை கைவிட்டுவிட்டனர். தோற்றம் மாறிவிட்டது. அதுபோன்ற நிலைமையிலும், அந்த துன்பத்திலும் எனது தந்தை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் கலீஃபாவாகவும், பிரதிநிதியாகவும் ஆனார்கள்.

எனது தந்தைக்கு எப்படிபட்ட துன்பங்களெல்லாம் வந்தன என்றால், அவை மலைகள் மீது இறங்கியிருந்தால் அவை அழிந்துபோயிருக்கும். தற்போது சிந்தித்து பாருங்கள். கடினங்களின் மலைகள் அன்னார் மீது இறங்கியபோதிலும் அன்னார் (ரலி) அவர்கள் தைரியத்தையும், துணிவையும் இழந்துவிடாமல் இருந்தது என்பது ஒரு சாதாரண மனிதனின் பணி அல்ல. இந்த உறுதிப்பாடு உண்மையையே எதிர்பார்க்கின்றது. மேலும் சித்தீக் (ரலி) அவர்களே அதனை வெளிப்படுத்தினார்கள். வேறு ஒரு நபர் அந்த அபாயத்தை சமாளிப்பது என்பது சாத்தியமற்றதாக இருந்தது. அனைத்து சஹாபிகளும் அந்த நேரத்தில் இருந்தனர். இது எனக்கான உரிமை என்று எவருமே கூறவில்லை. நெருப்பு மூட்டப்பட்டுவிட்டது என்பதையும் அதில் யார் வீழ்வார்? என்பதையும் அவர்கள் கண்டுகொண்டு இருந்தனர். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அந்த நிலைமையில் தமது கையை நீட்டி அன்னார் (ரலி) அவர்களிடம் பைஅத் செய்தார்கள். பின்னர் அனைவரும் ஒருவர் பின் ஒருவராக பைஅத் செய்துவிட்டனர். அன்னார் (ரலி) அவர்களின் இந்த உண்மை தான் அந்தக் குழப்பத்தை அகற்றியது. மேலும், அந்த துன்பம் கொடுத்தவர்களை அழித்தது. முஸைலமாவுடன் ஒரு இலட்சம் நபர்கள் இருந்தனர். அவனது விவகாரம் அபாஹத் எனும் விவகாரம் ஆக இருந்தது. அபாஹத் என்பது ஷரீஅத்தில் இருக்கும் முபாஹ் எனும் ஆகுமான அல்லது ஹலாலான விஷயம் ஆகும். (உருது அகராதி வரலாற்று சட்டத்தின் அடிப்படையில் அபாஹத் என்ற சொல்லின் விளக்கம்) மக்கள் அவனது அபாஹதி விஷயங்களை பார்த்து, பார்த்து அவனுடன் இணைந்து வந்தார்கள். ஏராளமான தவறான விஷயங்களையும் அவன் ஆகுமானதாக ஆக்கி வைத்திருந்தான். இதற்கு முன்னர் இது எடுத்துரைக்கப்பட்டுவிட்டது.

எவ்வாறு இருப்பினும், கூறினார்கள்: மக்கள் அவனது அபாஹதி விஷயங்களை பார்த்து,பார்த்து அவனது மார்க்கத்தில் இணைந்து வந்தனர். ஆனால், இறைவன் தனது ஆதரவுக்கான

சான்றை வழங்கினான். மேலும், அனைத்து கஷ்டங்களையும் எளிதாக்கிவிட்டான்.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 378-379)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மேலும் கூறுகின்றார்கள்: அன்னார் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலம் அச்சம் மற்றும் துன்பத்திற்கான காலமாக இருந்தது என்ற விஷயம் ஆராய்ச்சியாளர்களிடமிருந்து மறைவாக இல்லை. அந்த வகையில், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மரணமடைந்துவிட்டபோது இஸ்லாம் மற்றும் முஸ்லிம்கள் மீது துன்பங்கள் இறங்கின. ஏராளமான நயவஞ்சகர்கள் முர்தத் ஆகிவிட்டனர். முர்தத்களின் நாவுகள் நீண்டன. இட்டுக்கட்டும் ஒரு கூட்டத்தினர் நபித்துவ வாதம் புரிந்தனர். மேலும் பெரும்பாலான குடிமக்கள் அவர்களை சுற்றி ஒன்றுகூடினர். எந்த அளவுக்கு என்றால், முஸைலமா கஸ்ஸாபுடன் சுமார் ஒரு லட்சம் அறிவீனர்களும், தீய நடத்தை கொண்ட நபர்களும் இணைந்து கொண்டனர். குழப்பங்கள் கிளர்ந்து எழுந்தன. துன்பங்கள் அதிகரித்தன. அழிவுகள் தொலைவிலும், அருகிலும் சூழ்ந்து கொண்டன. நம்பிக்கையாளர்கள் மீது நிலநடுக்கம் ஏற்பட்டது. அந்த நேரத்தில் அனைத்து மக்களும் சோதிக்கப்பட்டனர். அபாயகரமான மற்றும் சுய நினைவை இழக்கச் செய்யக் கூடிய நிலைமைகள் வெளிப்பட்டன. நம்பிக்கையாளர்களின் இதயங்களில் நெருப்பின் கங்குகளை தகிக்க செய்ததுபோன்று அவர்கள் ஒன்றும் செய்ய இயலாதவர்களாக இருந்தனர் அல்லது அவர்கள் கத்தியால் அறுக்கப்பட்டுவிட்டவர்களைப் போன்று இருந்தனர். படைப்பினங்களில் சிறந்தவரான ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் பிரிவின் காரணமாகவும், எரித்து சாம்பலாக்கிவிடும் நெருப்பின் வடிவில் வெளிப்பட்டுக் கொண்டிருந்த அந்த குழப்பங்களின் காரணமாகவும் நம்பிக்கையாளர்கள் அழுதுகொண்டிருந்தனர். அமைதிக்கான எந்த சூழலும் இல்லாமல் இருந்தது. குப்பை கூளங்களில் முளைத்த செடிகளைப் போன்று குழப்பவாதிகள் சூழ்ந்திருந்தனர். நம்பிக்கையாளர்களின் அச்சமும், அவர்களின் பதற்றமும் அதிகரித்து வந்தது. மேலும் அவர்களின் உள்ளங்கள் அச்சத்தாலும், நிம்மதியின்மையினாலும் நிறைந்திருந்தது.

அதுபோன்ற அபாயகரமான நேரத்தில் (ஹஸ்ரத்) அபூபக்ர் (ரலி) அவர்கள் அப்போதைய ஆட்சியாளராகவும், காத்தமுன்னபிய்யீன் (ஸல்) அவர்களின் கலீஃபாவாகவும் ஆக்கப்பட்டார்கள். நிராகரிப்பாளர்கள் மற்றும் முர்தத்களின் நடத்தைகளையும், செயல் முறைகளையும் அன்னார் (ரலி) அவர்கள் நேரில் கண்டுகொண்டிருந்தார்கள். அவற்றின் காரணமாக அன்னார் (ரலி) அவர்கள் துக்கத்திலும், துன்பத்திலும் மூழ்கிவிட்டார்கள். அன்னார் (ரலி) அவர்கள் தொடர் மழையைப் போன்று அழுதார்கள். அன்னாரின் கண்ணீர் ஓடும் நீரூற்றைப் போன்று பெருக்கெடுத்தது. அன்னார் (ரலி) அவர்கள் (தமது) அல்லாஹ்விடம் இஸ்லாம் மற்றும் முஸ்லிம்களின் நன்மைக்காக துஆ செய்து கொண்டிருந்தார்கள்.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

அன்னார் (ரலி) கூறுகின்றார்கள். எனது தந்தை கலீஃபாவாக ஆக்கப்பட்டார்கள். அல்லாஹ் அன்னாருக்கு ஆட்சியை வழங்கியபோது கிலாஃபத்தின் தொடக்கத்திலேயே எல்லா புறமிருந்தும் குழப்பங்களையும், பொய் நபித்துவ வாதிகளின் நடவடிக்கைகளையும், நயவஞ்சகர்கள் மற்றும் முர்தத்களின் கிளர்ச்சிகளையும் கண்டார்கள். அன்னார் (ரலி) அவர்கள் மீது எவ்வளவு துன்பங்கள் இறங்கின என்றால் அவை மலைகள் மீது இறங்கியிருந்தால் அவை மண்ணோடு மண் ஆகி இருக்கும். மேலும் உடனடியாக தகர்ந்து தூள் தூளாகி இருக்கும். ஆனால், அல்லாஹ் தூதர்களுக்கு வழங்குகின்ற பொறுமையை அன்னாருக்கு வழங்கினான். எந்த அளவுக்கு என்றால், அல்லாஹ்வின் உதவி உடனடியாக வந்தடைந்தது. பொய் நபித்துவ வாதிகள் மற்றும் முர்தத்கள் அழிக்கப்பட்டுவிட்டனர். குழப்பங்கள் அகற்றப்பட்டன. துன்பங்கள் விலகின. மேலும், விவகாரங்கள் தீர்க்கப்பட்டன. கிலாஃபத் விவகாரம் வலிமையடைந்தது. அல்லாஹ் நம்பிக்கையாளர்களை அழிவிலிருந்து காப்பாற்றினான். அவர்களின் அச்சத்தின் நிலையை அமைதியில் மாற்றிவிட்டான். மேலும் அவர்களின் மார்க்கத்திற்கு வலிமையை வழங்கினான். மேலும் ஓர் உலகை உண்மையில் நிலை நிறுத்திவிட்டான். குழப்பவாதிகளின் முகங்களை கறுமையாக்கிவிட்டான். மேலும், தனது வாக்குறுதியை முழுமை செய்துவிட்டான். மேலும், தனது அடியாரான (ஹஸ்ரத் அபூபக்ர்) சித்தீக் (ரலி) அவர்களுக்கு உதவி வழங்கினான். வரம்பு மீறிய தலைவர்களையும், சிலைகளையும் அழித்துவிட்டான். மேலும், நிராகரிப்பாளர்களின் உள்ளங்களில் எப்படிபட்ட திகிலை ஏற்படுத்தினான் என்றால் அவர்கள் பின்வாங்கிவிட்டனர். (இறுதியில்) அவர்கள் மனம் திருந்தி தவ்பா செய்தனர். இதுவே வல்லமை மிக்க இறைவனின் வாக்குறுதியாக இருந்தது. அவன் அனைத்து உண்மையாளர்களையும் விட உண்மையாளன் ஆவான். எனவே, கிலாஃபத்திற்கான வாக்குறுதி தமது அனைத்து தேட்டங்களுடனும், அடையாளங்களுடனும்(ஹஸ்ரத் அபூபக்ர்) சித்தீக் (ரலி) அவர்களின் மீது முழுமையடைந்தது என்று சீர்தூக்கிப் பாருங்கள். (சிர்ருல் குலஃபா உருது மொழியாக்கம், பக்கம் 47-50, வெளியீடு நஸாரத் இஷாஅத்)

பின்னர், ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களைக் குறித்து கூறப்பட்டுள்ளது. அதாவது, ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் யமாமா போரை முடித்துக் கொண்டு தற்போது அங்கு தான் தங்கியிருந்தார்கள். அதற்குள் ஈராக்கை நோக்கி புறப்பட்டு விடுங்கள் என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அன்னாருக்கு கடிதம் எழுதினார்கள். (தாரீகுத் தபரி தொகுதி 2, பக்கம் 307, பதிப்பு தாருல் குதுபில் இல்மியா லெப்னான் 2012)

ஓர் அறிவிப்பில் வருகிறது. அதாவது ஹஸ்ரத் அலாஃ பின் ஹழ்ரமி (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் படையை வேண்டினார்கள். அன்னார் (ரலி) அவர்கள், யமாமாவிலிருந்து விரைவாக புறப்பட்டு ஹஸ்ரத் அஃலாவிடம் சென்றடைந்து அவருக்கு உதவி செய்யுங்கள் என்று ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்களுக்கு கடிதம் எழுதி கட்டளை வழங்கினார்கள். எனவே அன்னார் (ரலி) அவரின் உதவிக்காக அங்கு சென்றடைந்தார்கள். மேலும், ஹுதமை கொலை செய்தார்கள். பின்னர் அன்னாருடன் இணைந்து குத் என்ற பகுதியை முற்றுகையிட்டார்கள். குத் என்பது பஹ்ரைனில் உள்ள அப்துல்கைஸ் கோத்திரத்தின் வீதியாகும். அங்கு அதிகமாக பேரீத்தம் பழங்கள் இருந்தன. அதன் பிறகு, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அன்னாரை ஈராக்கின் பக்கம் செல்வதற்கு கட்டளையிட்டார்கள். அன்னார் (ரலி) அவர்கள் பஹ்ரைனிலிருந்து அங்கு இடம்பெயர்ந்தார்கள். (பலாஸாரியின் மொழியாக்க நூல்-ஃபுதூஹுல் பல்தான், பக்கம் 135 வெளியீடு நஃபீஸ் அகாடமி கராச்சி)

முஜ்ஜாஅஃ பின் முராரஃவின் மகளுடன் ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் செய்த திருமணத்தைப் பற்றி எழுப்பப்படுகின்ற கேள்விகளைக் குறித்து

வரலாற்று நூல்களிலும், வாழ்க்கை வரலாற்று புத்தகங்களிலும் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது. யமாமா போர் முடிந்து, பனூ ஹனீஃபாவின் எஞ்சிய மக்களுடன் சமாதான உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்ட பிறகு, ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்கள் ஒரு திருமணம் செய்தார்கள். அது குறித்து குறிப்பு கிடைக்கின்றது. வரலாற்று ஆசிரியர்களின் கருத்துப்படி, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு அந்த திருமணத்தைப் பற்றிய செய்தி கிடைத்த போது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் மீது அதிருப்தி அடைந்தார்கள். ஆனால், ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் விரிவான விளக்கத்தை கடிதம் மூலமாக எடுத்து வைத்தபோது, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் கோபம் நீங்கிவிட்டது. அன்னாரின் விளக்கத்திற்கு ஏற்ப, சமாதான உடன்படிக்கை செய்யப்பட்ட பிறகு ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள், முஜ்ஜாஅஃவின் மகளை தமக்கு திருமணம் முடித்து கொடுக்கும் படி அவனிடம் கோரிக்கை வைத்தார்கள். மாலிக் பின் நுவைராவின் மனைவி லைலா உம்மே தமீம் அவர்களுடன் நிகழ்ந்த சம்பவம் மற்றும் அந்த திருமணத்தால் ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் மீது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கொண்ட அதிருப்தி ஆகியவற்றை குறித்து முஜ்ஜாஅஃ அறிந்திருந்தார். எனவே காத்திருங்கள். எனது இடுப்பு முறிக்கப்படுவதற்கு தாங்கள் காரணமாகி விடுவீர்கள். மேலும், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் தண்டனையிலிருந்து உங்களை நீங்கள் காப்பாற்றிக் கொள்ள முடியாது என்று அவர் கூறினார். ஆனால், நீர் உமது மகளை எனக்கு மணம் முடித்து கொடு என்று ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் கூறினார்கள். எனவே அவர் தனது மகளை அன்னாருக்கு மணம் முடித்து கொடுத்துவிட்டார். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் யமாமாவைப் பற்றிய செய்திகளுக்காக தொடர்ந்து காத்திருந்தார்கள். ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களின் தூதுவரை அன்னார் (ரலி) எதிர்பார்த்து காத்திருந்தார்கள். ஒரு நாள் மாலைநேரத்தில் முஹாஜிர் மற்றும் அன்சார் சகோதரர்களின் ஒரு கூட்டத்தினருடன் ஓரிடத்தில் அன்னார் (ரலி) அவர்கள் அமர்ந்திருந்தார்கள். அப்போது, ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களால் அனுப்பப்பட்ட அபூகஸீமாவை அன்னார் (ரலி) அவர்கள் அங்கு சந்தித்தார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அன்னாரைப் பார்த்தபோது, என்ன தகவல் உள்ளது? என்று அன்னாரிடம் கேட்டார்கள். தூதரின் கலீஃபா அவர்களே! நல்ல செய்தி உள்ளது. அல்லாஹ் நமக்கு யமாமாவில் வெற்றி வழங்கிவிட்டான். இதோ, காலித் (ரலி) அவர்களின் கடிதத்தை பெற்றுக் கொள்ளுங்கள் என்று அவர் கூறினார். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் உடனடியாக நன்றி ஸஜ்தா செய்தார்கள். போரின் நிலைமைகளையும், அது எப்படி நிகழ்ந்தது? என்பதையும் எனக்கு கூறுவீராக என்று அன்னார் (ரலி), அவரிடம் கேட்டார்கள். இது தொடர்பாக ஓர் அறிவிப்பு முன்னரும் கூறப்பட்டுள்ளது. எவ்வாறு இருப்பினும், அபூகஸீமா போரின் விவரங்களை எடுத்துரைத்தவாறு, காலித் (ரலி) அவர்கள் என்னென்ன செய்தார்கள், எவ்வாறு படைகளை அணிவகுக்க செய்தார்கள்? எந்தெந்த சஹாபிகள் ஷஹீதாகினர்? எவ்வாறு எதிரி நம்மை பின்வாங்கச் செய்தான்? மேலும், நாம் விரும்பாத விஷயங்களுக்கு பழக்கமுடையவர்களாக எதிரி நம்மை எவ்வாறு ஆக்கினான்? என்பதையெல்லாம் அவர் கூறினார். அடுத்து, ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களின் திருமணத்தைக் குறித்தும் பேசப்பட்டது. அப்போது, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களுக்கு இவ்வாறு கடிதம் எழுதினார்கள்: உம்மே காலிதின் மகனே! தற்போது உமது வளாகத்தில், ஓராயிரம், ஈராயிரம் முஸ்லிம்களின் இரத்தத்தின் ஈரம் காயவில்லை அதற்குள் உமக்கு பெண்களை திருமணம் செய்யும் எண்ணம் ஆட்கொண்டுள்ளதா? மேலும், அல்லாஹ் உமக்கு எதிரிகள் மீது முழுமையான வலிமையை வழங்கியிருக்கும் போது, முஜ்ஜாஅஃ உம்மை ஏமாற்றிவிட்டு சமாதானம் செய்துகொண்டுவிட்டானா?

முஜ்ஜாஅஃவுடன் செய்து கொண்ட சமாதானம் மற்றும் அவருடைய மகளுடன் திருமணம் செய்து கொண்டது போன்ற காரணங்களால், தூதரின் கலீஃபா அபூபக்ர் (ரலி) அவர்களின் எச்சரிக்கைக்கு காலித் (ரலி) அவர்கள் ஆளானார்கள். அப்போது, அன்னார் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு பதில் கடிதம் அனுப்பினார்கள். அதில் அன்னார் தனது நிலைபாட்டின் விளக்கத்தையும், அதனை நியாயப்படுத்தியும் எழுதினார்கள்.

ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் எழுதினார்கள்:

அம்மா பஃது! மார்க்கத்தின் மீது ஆணையாக! மகிழ்ச்சி முழுமையடைந்துவிடாத வரையும், ஸ்திரத்தன்மை கிடைத்துவிடாத வரையும் நான் திருமணம் செய்யவில்லை. நான் எப்படிப்பட்ட நபரின் மகளை திருமணம் செய்துள்ளேன் என்றால், நான் மதீனாவிலிருந்து தூதுச் செய்தி அனுப்பியிருந்தாலும் அவர் அதனை மறுத்திருக்க மாட்டார்.மன்னித்துவிடுங்கள். நான் எனது இடத்திலிருந்து தூதுச் செய்தியை அனுப்புவதற்கு முன்னுரிமை வழங்கினேன். ஒருவேளை, மார்க்கம் அல்லது பௌதீக ரீதியில் இந்த திருமணம் தங்களின் விரும்பத்திற்கு எதிராக இருக்கும் என்றால் நான் தங்களின் விருப்பத்தை முழுமை செய்ய தயாராக இருக்கிறேன். கொலையுண்ட முஸ்லிம்களின் இரங்கல் விவகாரத்தை பொறுத்த வரை நான் கூற விழைவது இதுதான். அதாவது, எவரின் வேதனையும்,துன்பமும் உயிருள்ள ஒருவரை நிலை நிறுத்த முடியாது அல்லது மரணித்தவரை உயிருடன் கொண்டுவர முடியாது. அவ்வாறிருக்க, என்னுடைய வேதனையும், துன்பமும் எப்படி உயிருடன் வைக்க முடியும்? மேலும் மரணித்தவரை உயிருடன் திருப்பிக் கொண்டுவர முடியும்? நான் எவ்வாறு தாக்குதல் நடத்தினேன் என்றால், எதிரி உயிர் பிழைக்கும் நம்பிக்கையை இழந்துவிட்டான். அவன் மரணம் உறுதியாகிவிட்டது.

முஜ்ஜாஅஃவின் ஏமாற்றுதலுக்கான விவகாரத்தை பொறுத்தவரை நான் எனது கருத்தில் தவறிழைக்கவில்லை. இருப்பினும்,எனக்கு மறைவான ஞானம் இல்லை. நான் என்னவெல்லாம் செய்தேனோ அவற்றில் முஸ்லிம்களுக்கு ஆதரவாக அல்லாஹ் நன்மையை செய்துள்ளான். அவர்களை பூமிக்கு வாரிசுகளாக்கிவிட்டான். முடிவு இறையச்சம் உடையவர்களுக்கானது ஆகும்.

இந்தக் கடிதம் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு கிடைத்தபோது, அன்னார் (ரலி) அவர்களின் கோபம் அகன்றுவிட்டது. ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களின் கடிதத்தை எடுத்து வந்த குரைஷியர்களின் ஒரு கூட்டத்தினரும் காலித் (ரலி) அவர்கள் சார்பாக வருத்தத்தை தெரிவித்தனர். அப்போது, நீங்கள் உண்மையைக் கூறியுள்ளீர்கள் என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள். மேலும், ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களின் விளக்கத்தையும், வருத்தத்தையும் ஒப்புக் கொண்டார்கள். (அல் இக்திஃபாஃ தொகுதி 2, பகாம் 1, பக்கம் 69-70, ஆலமுல் குதுப் பெய்ரூத் 1997) (டாக்டர் அலி முஹம்மது ஸலாபி அவர்களின் உருது மொழியாக்க நூல்- ஸய்யிதுனா அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்கள், பக்கம் 367-368)

எதிர்வரும் நாட்களில் மீதி விஷயங்கள் எடுத்துரைக்கப்படும். மூர்த்தகளைப் பற்றிய ஒரு பகுதி நிறைவடைந்துவிட்டது.

தமிழாக்கம் :

மவ்லவி **A.** அப்துர் ரஹ்மான் தாஹிர்

* * * * *

# ஜுமுஆ பேருரை

## ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் மகத்துவமிக்க கலீஃபா ராஷித், சித்தீக்கே அக்பர் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் சிறப்புகள் மற்றும் உயர் அந்தஸ்து

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதுஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் இஸ்லாமாபாத்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 17 ஜூன் 2022,** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1401 ஆண்டு இஹ்ஸான் மாதம் **17ஆம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ○

اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ ○ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○

صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ○

கடந்த குத்பாவில், யமாமா போருடன் சம்பந்தப்பட்ட முர்தத்கள் அல்லது நயவஞ்சகர்களின் குறிப்பு நிறைவடைந்துவிட்டது என்று கூறியிருந்தேன். முஸைலமா கஸ்ஸாப் மற்றும் அவனது கூட்டாளிகளைப் பற்றிய குறிப்பு கடந்த குத்பாவில் முடிவடைந்துவிட்டது. ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் காலத்தில் வாள் ஓங்கிய அந்த முர்தத்களை பற்றிய குறிப்பு தொடர்கிறது. நான் ஏற்கனவே கூறியதுபோன்று, பல போர்ப்படைகள் இருந்தன.முதாலவது போர்ப்படை பற்றி எடுத்துக் கூறப்பட்டது. அது மிக நீண்ட குறிப்பாக இருந்தது. மீதமிருந்த பத்து போர்ப்படைகளில் இரண்டவாது மற்றும் மூன்றாவது போர்ப் படையைப் பற்றி இவ்வாறு வருகிறது:

ஹஸ்ரத் ஹுஸைஃபா (ரலி) மற்றும் ஹஸ்ரத் அர்ஃபஜஆ மூலமாக இந்தப் போர்ப் படை அனுப்பப்பட்டது. அது ஓமனில் முர்தத் ஆகியிருந்த கிளர்ச்சியாளர்களுக்கு எதிராக அனுப்பப்பட்ட போர்ப் படையாகும். ஓமன் என்பது பஹ்ரைனுக்கு அருகில் உள்ள ஏமனின் நகரமாகும். ஓமன் பாரஸீக வளைகுடாவுக்கும், அரபிக் கடலுக்கும் மத்தியில் அமைந்துள்ளது. அதில் அந்த நாட்களில் இன்றைய ஐக்கிய அரபு எமிரேட்களின் கிழக்குப் பகுதிகளும் இருந்தன. அங்கு சிலை வணக்கம் செய்யக் கூடிய ஆஸத் மற்றும் ஏனைய கோத்திரங்கள் வசித்து வந்தன. அவர்கள் நெருப்பை வணங்குபவர்களாக இருந்தனர். மஸ்கத், ஸுஹாரா மற்றும் துபா ஆகியவை அங்குள்ள கரையோர நகரங்களாக இருந்தன.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அருளுக்குரிய காலக் கட்டத்தில், ஓமன் ஈரானியர்களின் அதிகாரத்துக்கு உட்பட்டிருந்தது. மேலும், அவர்கள் தரப்பிலிருந்து ஜேஃபர் என்ற மனிதர் பணியாளராக நியமிக்கப்பட்டிருந்தார். அந்தப் பகுதியில் நெருப்பை வணங்கும் மதம் பரவியிருந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹிஜ்ரி 8 ஆம் ஆண்டில், ஹஸ்ரத் அபூ ஸைத் அன்சாரி (ரலி) அவர்களையும், இஸ்லாத்தின் பிரச்சாரத்திற்காக அங்கிருந்த இரண்டு தலைவர்களான ஜேஃபர் பின் ஜூலந்தியா மற்றும் அப்பாது பின் ஜூலந்தியா ஆகியோரின் பெயரில் கடிதம் கொடுத்து அனுப்பினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய கடிதத்தின் கருத்து இதுவாகும்:

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம். இந்தக் கடிதம் அல்லாஹ்வுடைய அடியார் மற்றும் அவனது தூதர் முஹம்மது (ஸல்) தரப்பிலிருந்து, ஜூலந்தியாவின் மகன்களான ஜேஃபர் மற்றும் அப்பாது ஆகியோருக்கு அனுப்பப்படுகிறது. நேர் வழியைப் பின்பற்றியவர் மீது சாந்தி உண்டாகட்டுமாக. நான் உங்களுக்கு இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வதற்கு அழைப்பு விடுக்கிறேன். நீங்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளுங்கள். பாதுகாப்பாக இருப்பீர்கள். நான் அல்லாஹ்வின் தூதர் ஆவேன். உயிருடன் இருக்கக் கூடிய ஒவ்வொருவரையும் எச்சரிக்க வேண்டும் என்பதற்காகவும், நிராகரிப்பாளர்களுக்கு சான்றை முழுமை செய்வதற்காகவும், நான் முழு உலகத்திற்காகவும் அனுப்பப்பட்டுள்ளேன். நீங்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டால், நான் வழக்கப்படி உங்களை அந்த இடத்தின் அதிகாரியாக இருக்க அனுமதிப்பேன்.

நீங்கள் இஸ்லாத்தை ஏற்க மறுத்துவிட்டால், உங்களுடைய அரசாங்கம் உங்களிடமிருந்து பறிக்கப்படும்.

சில அறிவிப்புகளுக்கு ஏற்ப பல நாட்கள் விவாதத்திற்குப் பிறகு அந்த சகோதரர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்கள். பிறிதோர் அறிவிப்புப்படி, ஓமன் உடைய அதிகாரி ஜேஃபர் கூறினார்: நான் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வதில் சாக்குப் போக்கும் கூறுவதற்கில்லை. ஆனால், நான் இங்கிருந்து ஸகாத்தை ஒன்றுகூட்டி மதீனாவுக்கு அனுப்பினால் என்னுடைய சமுதாயம் என்னை விட்டுப் பிரிந்துவிடும் என்ற அச்சம் இருக்கிறது. இதைக் கேட்ட ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்கள், அவரிடம் இந்த விஷயத்தை முன் வைத்தார்கள். அதாவது, அந்தப் பகுதியில் வசூலாகக்கூடிய ஸகாத் தொகை அந்தப் பகுதியின் ஏழைகளுக்கே செலவிடப்படும். எனவே அவர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்.

ஹஸ்ரத் அம்ர் (ரலி) அவர்கள் அங்கு 2 ஆண்டுகள் வரை தங்கியிருந்தார்கள். மக்களுக்கு இஸ்லாத்தை எட்ட வைத்து வந்தார்கள். அன்னாரின் இந்த வெற்றிகரமான தப்லீக் முயற்சியால் அந்தப் பகுதியன் பெரும்பாலான மக்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்கள். ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மரணமடைந்தபோது, அரபு நாட்டின் நாலாப்புறமும் மார்க்கத்தை விட்டு விலகுதலும், கிளர்ச்சி செய்தலும் பரவிவிட்டபோது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்களை ஓமனிலிருந்து மதீனாவிற்கு வரவழைத்துக் கொண்டார்கள். மறுபுறம் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் மரணத்திற்குப் பிறகு, அந்த மக்களில் லகீத் பின் மாலிக் அஸ்தீ என்பவன் எழுந்தான். அவனது புனைப் பெயர் ஸூல் தாஜ் ஆகும். அவன் அறியாமைக் காலத்தில் ஓமன் பேரரசு ஜூலந்தியாவுக்கு நிகராகக் கருதப்பட்டான்.

ஜூலந்தியா என்பது ஓமன் உடைய பேரரசர்களின் குடும்பப் பெயராகும். எவ்வாறு இருப்பினும், அவன் நபித்துவ வாதம் செய்துவிட்டான். ஓமனிலிருந்த அறிவீனர்கள் அவனைப் பின்பற்றினர். அவன் ஓமன் மீது ஆதிக்கம் செலுத்திவிட்டான். ஜேஃபருக்கும் அவனுடைய சகோதரன் அப்பாதுக்கும் மலைகளில் தஞ்சம் புக நேரிட்டது. ஜேஃபர், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு இந்த எல்லா சூழ்நிலையைப் பற்றியும் தெரியப்படுத்தி உதவி கோரினார். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அவரிடம் 2 அமீர்களை அனுப்பினார்கள். ஒருவர், ஹஸ்ரத் ஹுஸைஃபா பின் முஹ்ஸின் ஃகல்ஃபானீ. அவரை ஓமனுக்கும், இரண்டாவது அமீரான அர்ஃபஜஆ பின் ஹர்ஸமா பார்க்கீ யஸ்தீயை மஹ்ராவுக்கும் அனுப்பினார்கள். அவர்கள் இருவரும் ஒன்றாகப் பயணிக்குமாறும், போரை ஓமனிலிருந்து துவங்குமாறும் அவர்களுக்கு கட்டளையிட்டார்கள். மஹ்ரா என்பது ஏமன் உடைய ஒரு கோத்திரத்தின் பெயராகும். ஓமனில் போர் நடக்கும்போது ஹுஸைஃபா தலைவராக இருப்பார் என்றும், மஹ்ராவில் போர் நடக்கும்போது ஹுஸைஃபா படைத்தளபதி பொறுப்பை நிறைவேற்றுவார் என்றும் ஆணையிட்டார்கள்.

ஹஸ்ரத் ஹுஸைஃபா மற்றும் அர்ஃபஜஆவை பற்றி அறிமுகம் பின்வருமாறு வருகிறது: தபரீ வரலாற்று நூலில் ஹஸ்ரத் ஹுஸைஃபா (ரலி) அவர்களின் பெயர் ஹுஸைஃபா பின் முஹ்ஸின் ஃகல்ஃபானீ என்று கூறப்பட்டுள்ளது. அதேநேரம், ஸஹாபிகளின் வாழ்க்கை சூழலை உள்ளடக்கிய

**EDITOR**
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
**SUB EDITOR**
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly **BADAR** Qadian

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2020-2022 Vol. 7 Thursday 21 July 2022 Issue No. 29

**MANAGER**
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.575/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

நூலில் அன்னாரின் பெயர் ஹுஸைஃபா ஃகல்ஃபானீ என்று கூறப்பட்டுள்ளது. அன்னார் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் மரணம் வரை ஓமனின் ஆளுநராக இருந்தார்கள். சஹாபிகளின் வாழ்க்கை சூழலை உள்ளடக்கிய நூலில், ஹஸ்ரத் அர்ஃபஜஆ அவர்களின் முழுப் பெயர் அர்ஃபஜஆ பின் ஹலீமா என்று கூறப்பட்டுள்ளது. அல்லாமா இப்னு அஸீர் அவர்களின் பார்வையில், அன்னாரின் தந்தையார் பெயர் ஹர்ஸமா ஆகும். அன்னார் எதிரிகளுக்கு எதிராகத் தீட்டும் போர்திட்டங்களுக்கு மிக பிரபல்யமானவர்களாக இருந்தார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், அவர்கள் இருவரின் உதவிக்காக ஹஸ்ரத் இக்ரிமா பின் அபீ ஜஹலை அனுப்பினார்கள்.

இதற்கு முன்னர் யமாமா போரின் விளக்கங்களில், முஸைலமா கஸ்ஸாப் பற்றிய குறிப்பில் இது குறித்து கூறப்பட்டுவிட்டது. அதாவது, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் இக்ரிமா (ரலி) அவர்களை முர்தத்கள் மற்றும் கிளர்ச்சியாளர்களை எதிர்த்து போரிடுவதற்காக அனுப்பியபோது, ஷரஹ்பீல் பின் ஹஸனாவை அன்னாருக்கு உதவுவதற்காக அனுப்பி வைத்தார்கள். அப்போது, இக்ரிமா அவர்களுக்கு, ஷரஹ்பீல் வருவதற்கு முன்னர் தாக்குதல் தொடுக்கக் கூடாது என்று ஆணையிட்டிருந்தார்கள். ஆனால், அன்னார் அவரின் வருகைக்காக காத்திருக்காமல் தாக்குதல் நடத்திவிட்டார்கள். அதன் விளைவாக, அன்னாருக்குத் தோல்வியைத் தழுவ நேரிட்டது. அதனால் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அன்னார் மீது கோபமடைந்தார்கள். மேலும், ஓமனை நோக்கிச் செல்லுமாறு அன்னாருக்கு கட்டளையிட்டார்கள்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் கட்டளைப்படி, இக்ரிமா (ரலி) அவர்கள் தனது படையை தம்முடன் அழைத்துக் கொண்டு அர்ஃபஜஆ மற்றும் ஹுஸைஃபாவுக்குப் பின்னாலேயே ஓமனை நோக்கிப் பயணமானார்கள். அவர்கள் இருவரும் ஓமனை சென்றடைவதற்குள் இக்ரிமா (ரலி) அவர்கள் ஓமனுக்கு அருகில் உள்ள ரிஜாம் எனும் ஓரிடத்தில் அவர்கள் இருவரையும் சென்றடைந்தார்கள். ஜேஃபர் மற்றும் அவரது சகோதரர் அப்பாதிடம் அன்னார் தமது தூதுச் செய்தியை அனுப்பிவிட்டார்கள். காமில் இப்னு அஸீர் போன்ற சில வரலாற்று நூல்களில் அன்னாருடைய பெயர் அயாஸ் என்று கூறப்படுகிறது. ரிஜாம் என்பது ஓமனில் இருக்கும் ஒரு பெரிய மலைத் தொடர் ஆகும்.

எவ்வாறு இருப்பினும், முஸ்லிம் படையின் தலைவர்களின் தூதுச் செய்தி கிடைத்த பிறகு, ஜேஃபரும், அப்பாதும் தத்தமது தங்குமிடத்திலிருந்து வெளியேறினார்கள். அவர்கள் இருவரும் முதலில் ஒளிந்திருந்தார்கள். அந்த முர்தத் நபித்துவ வாதம் செய்த பிறகு,தனது படையை தயார் செய்து வைத்திருந்தான். அப்போது அவனது வலிமை அதிகரித்து விட்டது.

எவ்வாறு இருப்பினும், அவர்கள் தமது தங்குமிடத்திலிருந்து வெளியேறினார்கள். மேலும், அவர்கள் ஸுஹாருக்கு வந்து கூடாரமிட்டார்கள். மேலும், நீங்கள் அனைவரும் எங்களிடம் வந்துவிடுங்கள் என்று ஹுஸைஃபா, அர்ஃபஜஆ மற்றும் இக்ரிமா ஆகியோருக்கு தூது அனுப்பினார்கள்.

ஸுஹார் என்பதும் கூட, ஓமனில் மலைகளோடு இணைந்திருக்கும் ஒரு சிற்றூர் ஆகும். இது தொடர்பாக வருகிறது. இங்கு ரஜப் மாதத்தின் துவக்கத்தில் ஐந்து இரவுகள் வரை ஓமனின் ஒரு சந்தை அமைக்கப்பட்டு வந்தது. ஆக, முஸ்லிம்களின் படை ஸுஹாரில் ஒன்று கூடிவிட்டது. அத்துடன் இணைந்திருந்த பகுதிகளை முர்தத்கள் இல்லாத பகுதிகளாக ஆக்கிவிட்டார்கள். மறுபுறம், லகீத் பின் மாலிக்குக்கு இஸ்லாமிய படை வந்தடைந்த தகவல் கிடைத்தது. அப்போது, அவன் தனது படையை உடன் அழைத்துக் கொண்டு எதிர்த்துப் போரிடுவதற்காகப் புறப்பட்டான். துபா எனும் இடத்தில் தங்கினான். அவனுக்குப் போரில் வலிமை கிடைக்க வேண்டும் என்பதற்காகப் பெண்களையும், குழந்தைகளையும் பொருட்செல்வங்களையும் தனக்குப் பின்னால் வைத்தான். துபா என்பதும் அந்தப் பகுதியின் நகரமாக இருந்தது. வியாபார சந்தையாக இருந்தது.

முஸ்லிம் தலைவர்கள் லகீத் உடைய தோழமை தலைவர்களுக்குக் கடிதங்கள் எழுதினார்கள். அந்தக் கடிதங்களின் விளைவு என்ன ஆனது? என்றால், இந்தத் தலைவர்கள் அனைவரும் லகீதை விட்டுவிலகிவிட்டார்கள். முஸ்லிம்களோடு வந்து இணைந்து கொண்டார்கள். இதே இடத்தில், அதாவது துபாவில் லகீத் உடைய படையுடன் பின்னர் மும்முரமான போர் நடைபெற்றது. ஆரம்பத்தில் லகீத் உடைய கை ஓங்கியிருந்தது. முஸ்லிம்கள் தோல்வி அடைந்துவிடும் நிலை இருந்தது. ஆனால், அல்லாஹ் தனது பரிவு மற்றும் கருணையால் பேரருள் புரிந்தான்.

மேலும் அந்த இக்கட்டான தருணத்தில் உதவியை வழங்கினான். பஹ்ரைனின் பல்வேறு கோத்திரங்கள் மற்றும் பனூ அப்தில் கைஸ் தரப்பிலிருந்து பெரியதோர் உதவிப் படை வந்தடைந்துவிட்டது. அதனால் அவர்களின் ஆற்றலும், பலமும் அதிகரித்துவிட்டது. அவர்கள் முன்னோக்கிச் சென்று லகீத் உடைய படை மீது கடுமையான தாக்குதல் தொடுத்துவிட்டார்கள். அதனால், லகீத் உடைய படை ஆட்டங்கண்டு போனது. அவர்கள் ஓடிவிட்டார்கள். முஸ்லிம்கள் அவரை விரட்டிச் சென்றார்கள். மேலும், பத்தாயிரம் போர் வீரர்களை வாளுக்கு இரையாக்கினார்கள். பிள்ளைகளையும் பெண்களையும் சிறைபிடித்துவிட்டார்கள். செல்வத்தையும், சந்தையையும் ஆதிக்கத்தில் எடுத்துக் கொண்டார்கள். மேலும், அதில் ஐந்தில் ஒரு பங்கை அர்ஃபஜஆவின் கையில் கொடுத்து ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் அனுப்பி வைத்துவிட்டார்கள்.

தமிழாக்கம் : மவ்லவி அதாவுல் முக்னீ

(தொடர்ச்சி... அடுத்த இதழில்)

### திருக்குர்ஆனிலிருந்து...

(செவியேற்பவரே!) இப்ராஹீம் இவ்வாறு கூறிய நேரத்தை (நினைத்துப் பாரும்). என் இறைவா! இந்த (மக்கா) நகரத்தை அமைதிக்குரியதாக்கி வைப்பாயாக. நாங்கள் பொய்தெய்வங்களை வணங்குவதிலிருந்து என்னையும், என் சந்ததிகளையும் காப்பாயாக. (14:36)

A. Basheer Ahmad (Sec. Waqf-e-Jadid, Melapalayam)

O.A. NIJAM 99947 57172

**O.A.N. Doors & Steels**

V.A. SAIT 99430 30230



All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-

5C/6-A, Ambai Road, Kulavanikarpuram, { opp. Karuna Clinic } Tirunelveli-627005

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad